விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 118 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 02 திங்கட்கிழமை (15.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




- பிறந்தது குரோதி ; மூண்டது பகை
- இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்



# 3ஆம் உலகப் போர் வெடிக்கும் அபாயம்



(ரெல் அலிவ்) இஸ்ரேல் மீது ஈரான் நேற்று ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் ஆளில்லா விமானத் தாக்குதலையும் நடத்தியுள்ளது.

இத்தாக்குதலையடுத்து அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் மத்திய கிழக்கு மற்றும் முஸ்லிம் நாடுகள் ஈரானுக்கு ஆதரவாகவும் களமிறங்கும் அபாயம் காணப்படுவதனால், மூன்றாம் உலக மகா யுத்தம் ஏற்படக்கூடும் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)





## குரோதி வருட பலன்கள்

உள்ளே

## கடன் மறுசீரமைப்பு வோஷிங்டனில் விசேட கலந்துரையாடல்

13 பக்கம் பார்க்க

# தமிழ்ப் பொது வேட்பாளர் யார்? கன்னை பிரிந்தன கட்சிகள்

## முடிவெடுக்க முடியவில்லை


(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், தமிழர் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டினை கொண்டிருப்பினும் பொது வேட்பாளர் யார் என முடிவெடுப்பதில் கட்சிகளிடையே பிளவுகள் அதிகரித்துள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேற தமிழ்ப் பொது வேட்பாளர் அவசியம்

## காலத்தின் தேவை என்கிறார் சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் திடமான அரசியல் கொள்கைக்கு தமிழ் பொது வேட்பாளர் காலத்தின் தேவை என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற 15

# அமெரிக்க ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்து




(வோஷிங்டன்)

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இலங்கை மக்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ்கணக்கில் ஒரு குறிப் பொன்றை யிட்டு அவர் இந்த, 15

## கைத்தொலைபேசி சின்னத்தில்

# தேர்தல் களம் காண்கிறாரா ஜனாதிபதி ரணில்?



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்குவது தொடர்பில் தீவிரமாக ஆலோசித்து வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சின்னமாகக் கைத்தொலைபேசியினைத் தேர்ந் 15

# சூடு பிடிக்கிறது கச்சதீவு மூக்கை நுழைக்கிறது சீனா

(கொழும்பு)


இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கச்சதீவு விவகாரம் தொடர்பில் சீனாவின் தலையீடு சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் கச்சதீவு அறிக்கை, இலங்கை மீது இந்தியா முறையாக உரிமை கோரும் வாய்ப்பை எழுப்பியுள்ளதாக சீனாவின் அரச செய்தித்தாள் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு கச்சதீவை சுற்றியுள்ள கடற்பரப்பில் கடற்றொழிலில் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுவருட நன்னாளான நேற்று திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா ஸமேத ஸ்ரீ காயாரோஹண சுவாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற சிற்சபையில் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரப்பெருமான் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(கோப்பாய்)

கதிரையில் அமர்ந்து உணவு உண்ணும் போது மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் நேற்று கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீரபத்திரர் கோவில் வீதி கோப்பாய் தெற்கைச் சேர்ந்த மாணிக்கம் மகாலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழுந்தவராவார் (வயது 72).

பிரஸ்தாபநபர் மயங்கி விழுந்ததையடுத்து கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழுந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,10)

## கட்சித் தாவல்களால் சூடுபிடிக்கும் தேர்தல்களம்

# மகிந்தவை விடுத்து ரணிலுடன் ஐக்கியமாகும் பெரமுனவினர் !

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளத் தயாராகி வருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

தற்போது அமைச்சரவை அமைச்சர் பதவிகளை வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும், இராஜாங்க அமைச்சர் பதவிகளை வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் குழுவில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை பொதுஜன பெரமுனவிற்கு பெரும் பின்னடைவாக இருக்குமென கருதப்படுகிறது.

அதேவேளை, டலஸ்அழகப்பெருமவின் கூட்டணியில் இருந்து இருவர் சஜித்துடன் இணையவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கட்சித் தாவல்கள் கட்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

# வீதி விபத்தில் இருவர் மரணம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

ஹாலி-எல ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் நேற்று இடம்பெற்ற இவ் விபத்தில் 51 வயது மற்றும் 71 வயதுடைய இரண்டு பெண்கள் உயிழந்துள்ளனர். (ந-7,10)


## பதவி வெற்றிடம்

**பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்**

தகைமை
- ❖ க.பொ.த உயர்தரம்
- ❖ சிங்களத்தில் சரளமாகப் பேசும் திறன்
- ❖ வயது 25 - 65
- ❖ தகைமையுடைய இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு :
யாழ்ப்பாணத்தில் இருந்து 7Km தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்
வலம்புரி நாளிதழ்,
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

மேலதிக தொடர்புகளுக்கு :
076 097 3121


## கண்ணீர் அஞ்சலி



இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலையில் பத்து வருடங்களுக்கு மேலாக மிருதங்க ஆசிரியராக பணியாற்றிய தெல்லிப்பழை

**மிருதங்க வித்துவான்**

### பிரம்மஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயர் வரதராஜசர்மா

அவர்கள் கடந்த 10.04.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

பிறப்பு 02.05.1955
இறப்பு 10.04.2024

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் [illegible]
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்[illegible]

(0018)


# பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் **கல்யாண மாலை**

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 68 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட 68 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பொது சுகாதார பரிசோதகர்களால் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இது வரையான காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஹோட்டல்கள், பேக்கரிகள், மீன் மற்றும் இறைச்சிக்கடைகள், குளிரூட்டப்பட்ட உணவுப் பண்டங்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் உள்ளிட்ட 700 இற்கும் மேற்பட்ட பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என கொழும்பு பிராந்திய நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் பிரியந்த விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த சோதனை நடவடிக்கைகளில் தரமற்ற உணவுப் பொருள்கள், உரிய வகையில் களஞ்சியப்படுத்தப்படாமை, லேபில்கள் மற்றும் பொதிகளிலுள்ள குறைபாடுகள் காரணமாக இத்தகைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.(5-6)

# நீர்த் தாங்கி கவிழ்ந்து விழுந்ததில் சிறுமி மரணம்

(கொழும்பு)

அரலகங்வில ருஹுணுகம பிரதேசத்தில் பிளாஸ்டிக் தண்ணீர் தாங்கி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ருஹுணுகம பிரதேசத்தில் வசித்து வந்த 3 வயதும் 7 மாதங்களுமான சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

கழிவறையில் உள்ள தண்ணீர் தொட்டிக்கு கீழே இருந்த தண்ணீர் குழாயில் நீராடிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.குறித்த சிறுமி மீது நீர் தாங்கி வீழ்ந்த நிலையில் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (5-6)

# நீரிழிவு நோயினால் 30 சதவீதமானோர் பாதிப்பு

## சுகாதார திணைக்களம்

(கொழும்பு)

**புத்தாண்டுக் காலத்தில் இனிப்புகளை உட்கொள்ளும் போது சுகாதார நிலை குறித்து அதிக கவனம் செலுத்துமாறு சுகாதார திணைக்களம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

சுகாதார திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், நாட்டில் 30 சத வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தாண்டு காலத்தில் சிறுவர்களுக்கு வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சல் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் சிறுவர்நல வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக சிறுவர்களுக்கு தண்ணீர் மற்றும் உணவுகளை வழங்கும் போது அவதானமாக செயற்பட வேண்டும் என அவர் பெற்றோரை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், அவ்வாறான நோய்தொற்று காணப்படுமிடத்து அவர்களை உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு செல்லுமாறு மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (5-6)

# எரிபொருள் விற்பனையில் கணிசமான உயர்வு



## காஞ்சன விஜேசேகர

(கொழும்பு)

நாட்டில் மாதாந்த எரிபொருள் விற்பனை அதிகரித்து வருவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை தனது எக்ஸ் வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையில் எரிபொருளின் பாவனை 50 வீதம் குறைந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

இலங்கையில் சிபெட்கோ, லங்கா ஐஓசி மற்றும் சினோபெக் ஆகிய நிறுவனங்கள் கடந்த பருவத்தில் விற்பனை செய்த எரிபொருள் அளவு தொடர்பான தரவுகளையும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும், கடந்த மார்ச் மாதத்தில் எரிபொருள் விற்பனையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)


12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06 . 04 . 1939

உதிர்வு 28 . 04 . 2012

அமரர்.திருமதி செந்திவடிவேலு
சிவரூபராணி (இந்திரா)

திதி-சப்தமி[15.04.2024]

அன்பின் உறைவிடமாய் எமை அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும் நலமே வாழ
அன்பு மழை பொழிந்து எமை வாழவைத்த தெய்வமே!
ஆண்டுகள் பன்னிரெண்டு கடந்தாலும் உன் நாமம்
எந் நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"மாதர் வளவு"
மல்லியோடை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(0017)



இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1165~~ | 900 |

விசேட விலைக் கழிவு

(447)

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433

288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494



கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி.சசிரேகா மோகனச்செல்வன்
அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்.சண்முகநாதன்
நாகரத்தினம்

அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(448)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய
மகா வித்தியாலயம்.





பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மே,11,12.2024.


(சி-0139)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சென்னைக்கு 'விசில் போடு'

## ● வீணானது ரோகித்தின் சதம் ● மும்பை தோல்வி



மும்பைக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் அசத்திய சென்னை அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் "சுப்பர்" வெற்றி பெற்றது. ரோகித் சர்மாவின் சதம் வீணானது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. மும்பையில் நடந்த லீக் போட்டியில் மும்பை, "நடப்பு சம்பியன்" சென்னை அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா, களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**தோனி விளாசல்**

சென்னை அணிக்கு ரகானே (5) ஏமாற்றினார். முகமது நபி பந்தை சிக்சருக்கு அனுப்பிய அணித் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட், கோயட்சீ வீசிய 5வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். ரச்சின் (21) ஓரளவு கைகொடுத்தார். ஹர்திக் பாண்ட்யா வீசிய 10வது ஓவரில் 3 பவுண்டரி விரட்டிய ஷிவம் துபே, ஷெப்பர்ட் வீசிய 11ஆவது ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். கோயட்சீ பந்தை சிக்சருக்கு அனுப்பிய ருதுராஜ் 33 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். அபாரமாக ஆடிய துபே, 28 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 90 ஓட்டங்கள் சேர்த்த போது ஹர்திக் பந்தில் ருதுராஜ் (69) ஆட்டமிழந்தார். டேரில் மிட்செல் (17) நிலைக்கவில்லை. அடுத்து வந்த "தல" தோனி, ஹர்திக் வீசிய கடைசி ஓவரில் "ஹட்ரிக்" சிக்சர் உட்பட 4 பந்துகளில் 20 ஓட்டங்கள் குவித்தார்.

20 ஓவர்களில் சென்னை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைக் குவித்தது. துபே (66), தோனி (20) ஆட்டமிழக்காமல் இருந்தனர். மும்பை சார்பில் ஹர்திக் பாண்ட்யா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**ரோகித் அபாரம்**

சவாலான இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு ரோகித் சர்மா, இஷான் கிஷான் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. ஷர்துல் தாகூர் வீசிய 4வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விரட்டினார் இஷான். முஸ்தபிஷுர் வீசிய 5வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய ரோகித், ஷர்துல் வீசிய 6வது ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். முதல் விக்கெட்டுக்காக 70 ஓட்டங்களைச் சேர்த்தபோது பதிரான "வேகத்தில்" இஷான் (23) வெளியேறினார். சூர்யகுமார் "டக்-அவுட்" ஆனார். ஜடேஜா பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ரோகித், 30 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.



அடுத்து வந்த திலக் வர்மா 20 பந்துகளில் 31 ஓட்டங்கள் விளாசினார். அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா (2), ரிம் டேவிட் (13), ஷெப்பர்ட் (1) சோபிக்கவில்லை. கடைசி ஓவரில் வெற்றிக்கு 34 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பதிரான பந்துவீசினார். முதலிரண்டு பந்தில் ஒரு ஓட்டம் கிடைத்தது. மூன்றாவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரோகித் 61 பந்துகளில் சதத்தை எட்டினார். கடைசி 3 பந்தில் 8 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது. இந்த ஓவரில் 13 ஓட்டங்கள் மட்டும் கிடைத்தன.

20 ஓவர்களில் மும்பை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. ரோகித் (105), நபி (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர். சென்னை சார்பில் பதிரான 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். (7,10)

# கொல்கத்தா வெற்றி

ஐ.பி.எல்., லீக் போட்டியில் சால்ட் (89 ஓட்.,) கைகொடுக்க, கொல்கத்தா அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சுலப வெற்றி பெற்றது. லக்னோ அணி ஏமாற்றம் அளித்தது.

இந்தியாவில் 17ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. கொல்கத்தாவில் நடந்த லீக் போட்டியில் லக்னோ - கொல்கத்தா அணிகள் மோதின.

முதலில் களமிறங்கிய லக்னோ அணி தடுமாறியது. குயின்ரன்(10) ஏமாற்றினார். ஸ்டார்க் "வேகத்தில்" தீபக் ஹூடா(8) ஆட்டமிழந்தார். மந்தமாக ஆடிய அணித்தலைவர் லோகேஷ் ராகுல்(39), ரசல் பந்தில் நடையை கட்டினார். ஸ்டாய்னிஸ் (10) நிலைக்கவில்லை. நரைன் "சுழலில்" படோனி (29) வெளியேற, லக்னோ 15 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களை எடுத்து தவித்தது. "நடுத்தர வரிசையில்" நரைன் (4-0-17-1) சிக்கனமாக பந்துவீச, ஓட்ட வறட்சி ஏற்பட்டது.

**பூரன் ஆறுதல்**

பின் பூரன் கைகொடுத்தார். அரோரா ஓவரில் வரிசையாக 2 சிக்சர் விளாசினார். கடைசி ஓவரில் பூரன் (45), அர்ஷத் கானை(5) அவுட்டாக்கிய ஸ்டார்க், 6 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து அசத்தினார்.

20 ஓவர்களில் லக்னோ அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்கள் எடுத்தது. குர்னால் பாண்ட்யா(7) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**26 பந்தில் அரைச்சதம்**

சுலப இலக்கை விரட்டிய கொல்கத்தா அணியின் ஆரம்பம் அமோகமாக இருந்தது. முதல் ஓவரில் ஷாமர் ஜோசப் 22 ஓட்டங்களை வாரி வழங்கினார். நரைன்(6) சோபிக்கவில்லை. குர்னால் ஓவரில் பில் சால்ட் "ஹட்ரிக்" பவுண்டரி அடித்தார். ரகுவன்ஷி(7) விரைவில் வெளியேறினார். அடுத்து வந்த அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஒத்துழைக்க, 26 பந்தில் அரைசதம் எட்டினார் சால்ட். இவர்கள் 3ஆவது விக்கெட்டுக்கு 76 பந்தில் 120 ஓட்டங்கள் சேர்த்தனர். ரவி பிஷ்னோய் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய சால்ட், இனிப்பான வெற்றியை தேடித் தந்தார். கொல்கத்தா அணி 15.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் எடுத்து, லக்னோவுக்கு எதிராக முதல் வெற்றியை பதிவு செய்தது.

சால்ட்(89 ஓட்.,, 14 பவுண்டரி, 3 சிக்சர்), ஸ்ரேயாஸ் (38) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (7,10)

## கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணம் - 2024

# டிறைற்றோன் அணி 2ஆவது சுற்றுக்குத் தகுதி



கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணத் தொடரின் 9ஆவது போட்டி 31.03.2024 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.

இப்போட்டியில் டிறைற்றோன் அணி மானிப்பாய் பரீஸ் அணியை 97 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டிறைற்றோன் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்து 30 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிருபாகரன் 61 பந்துகளில் 67 ஓட்டங்களையும் மணிவண்ணன் 40 பந்துகளில் 59 ஓட்டங்களையும் றஞ்சித் 45 பந்துகளில் 67 ஓட்டங்களையும் பிரியந்தன் 11 பந்துகளில் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரீஸ் அணி சார்பாக யாழினியான், சுபதீபன், தினேஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 25 ஓவர்களில் 8 இலக்குளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தெய்வீகன் 31 பந்துகளில் 18 ஓட்டங்களையும் கஜீன் 23 பந்துகளில் 18 ஓட்டங்களையும் கிருஷாந் 12 பந்துகளில் 15 ஓட்டங்களையும் சுபதீபன் 19 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டிறைற்றோன் அணி சார்பாக பிரியந்தன் 5 ஓவர்களில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் அபிராம் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற டிறைற்றோன் அணி 2023ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா கிரிக்கெட்டால் நடத்தப்படும் பிரிவு IIIஇற்கான தொடரில் யாழ்.மாவட்டத்தில் 2ஆம் இடத்தை (Runner - up) கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 குரோதி வருட பொதுப் பலன்கள்

**காரக் குரோதிதனில் கொள்ளமிடும்**
**கள்ளரினால் பாரினில் சனங்கள் பயமடைவர்.**
**கார்மிக்க அற்ப மழை பெய்யும் அகம் குறையுமே**
**சொற்ப விளைவு உண்டெனவே சொல்.**

## குரோதி வருட வெண்பா



என குரோதி வருடம் பற்றிய செய்யுள் தரப்பட்டுள்ளது. ஒரு குழந்தை பிறந்த நாள், நட்சத்திரம் கொண்டு பிறந்த வாழ்க்கை முழுவதும் பலன் கூறமுடியும் எனில் ஒரு வருடப் பிறப்பன்று உள்ள கோட்சாரத்தைக் கொண்டு வருஷப் பலன் கூற இயலும்,

பொதுப் பலன் எனும்போது காலபுருஷ தத்துவத்தை கையில் கொள்ள வேண்டும். எனில் மேஷம் முதல் வீடாக, தலையாக உள்ளது.

இவ் வருடப் பிறப்பின்போது மட்டுமல்ல, எல்லா தமிழ் வருடப்பிறப்பு சித்திரை மாதம் சூரியன் மேஷத்தில் உச்சமாகி அமர்ந்திருப்பார். இந்த வருடம் கூடவே தர்மத்துக்குரிய குருவும் அவருடன் அமர்ந்துள்ளார். இது மிகப்பெரிய அரிய கோட்சார அமைப்பு.

வியாழ வட்டம் எனும் அமைப்பில், குரு இவ்வாறு உச்ச சூரியனுடன் 2012 இல் அமர்ந்திருந்தார். ஆக, இவ்விதம் **குரு + உச்ச சூரிய சேர்க்கை என்பது அரிதான நிகழ்வு** தான். இது 12 **ஆண்டுக்கு ஒருமுறையே அமையும்**. இந்த குரு,சூரியன் இணைவு நிறைய சூரிய சம்பந்தமான குறைகளை நீக்கி விடும். ஏனெனில்,சூரியன் கோவிலில் சூரியன், சாயா, உஷாதேவி எதிரில் குரு பகவான் அமர்ந்து அவரது அதீத தீட்சயணத்தை ஏற்றுக் கொள்கிறார். இதனால் பக்தர்கள் சூரிய பகவானின் சாந்தமான பலன்களை மட்டும் பெற முடிகிறது.

சூரியன் காலபுருஷனின் ஐந்தாம் அதிபதி குரு 9 ஆம் அதிபதி. இந்த இரு பாவகாரர்களும் சேரும்போது அங்கு வியத்தகு யோக கிரக நிலை உண்டாகிறது.

இந்த கிரக கோட்சாரப்படி, 2024 குரோதி வருடம் தேர்தல் நடைபெற்றால் மிக நல்ல, நேர்மையான அரசியல்வாதிகள் வெற்றிபெறுவர். இப்போது ஆட்சிசெய்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகளும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் சமபலத்துடன் இருப்பர்.

செல்வ செழிப்பை குறிக்கும் சுக்கிரன் விரயத்தில் உச்சம் பெறுகிறார். எனவே நிறைய வெளிநாட்டு பண வரவும் அதற்கு ஈடான செலவுகளையும் மக்கள் செய்வர். மக்களுக்கு ஆடம்பர செலவுமேல் பெரும் மோகம் ஏற்பட்டு, கண்டதையும் வாங்கி காசை காலியாக்குவர்.

கம்யூட்டர்,கைபேசி,சவுண்ட் சிஸ்டம், கடிகாரம் என அடிக்கடி புதிதாக வாங்குவர். இளைஞர்கள்,வேலையையும் மாதத்திற்கு ஒன்று என மாற்றுவர். புதிய வேலைகள் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இதுபோல் கடன் வாங்கவும் அஞ்சமாட்டார்கள். ஏனெனில் கடனை திருப்பி கட்டும் தகுதியும் இருக்கும். திருட்டுப் பயம் அதிகரிக்கும்.

இந்த வருடம் வேலைக்கு பிற இடங்களுக்கு செல்லும் பெண்கள் தனியாக வாழ நேரிடும்.

இந்த வருட திருமண நிகழ்வுகளை, தங்கள் செல்வாக்கை காட்டும் காட்சிப் பொருளாக ஆக்குவர். வீண் ஆடம்பரமாக கல்யாணம் நடக்கும். கடன் வாங்கியாவது நிறைய செலவளிப்பர். நிறைய வியத்தகு,வினோத கல்யாண நிகழ்ச்சிகள் நடக்கும்.

இந்த வருடம், 8 ஆம் அதிபதி செவ்வாய் 11 எனும் அரசியல் வீட்டில் உள்ளார். எனவே ஒரு பழைய அரசியல்வாதிக்கு அடிபடும் வாய்ப்புண்டு. தொழில்கள் நல்ல லாபத்துடன் சிறு இடர்பாடுடன் நடக்கும்.

காலபுருஷனின் விரய வீட்டில் உச்ச சுக்கிரன்+ நீசபங்க புதன் + ராகு இருப்பதால், இந்த வருடம் அவசர அவசரமாக பிடிவாதமாக பிறமத ஆட்களை திருமணம் செய்வர். அதே வேகத்தில் அவதி அவதியாக விவாகரத்தும் செய்துவிடுவர். எனவே காதலிப்பவர்கள் இந்த வருடத்தை விட்டுவிடுங்கள். அடுத்த வருடமும் அதே காதலும் அன்பும் நீடித்து இருந்தால் திருமணம் என்ற கட்டுக்குள் வாருங்கள்.

**இந்த வருட கிரகங்களின் இருப்பும் பலனும்.**

**சூரியன்:** இவர் உச்சமாகி, குருபகவானுடன் உள்ளதால், ஆரோக்கியம் மேம்படும். அறிவு கூர்மையாகும். குழந்தைப் பேறு சிறக்கும். நிர்வாகத்திறன் மேம்படும். பித்தளை பொருட்களின் பயன்பாடு அதிலும் பூஜைக்கு அதிகரிக்கும். நிறைய வரி வசூலாகும்.

எனில் மக்கள் செழு மையாக இருப்பதாக அர்த்தம். வாரிசினால் கௌரவம் கிடை க்கும். இவரின் உச்சநிலை நன்மை தருகிறது.

**சந்திரன்:** இவ்வருடம் சந்திரன் கேமத் துருவ யோகம் பெறுகிறார். இதனால் வயதான பெண்களுக்கு பீடை உண்டாகும். எனினும் சந்திரனுக்கு கேந்திரத்தில் கிரகம் உள்ளதால் இந்த தோஷம் நீங்குகிறது. இதன் மூலம் இந்த வருடம் வயதான பெண்களை பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக வேலை செய்யும் ஆட்களை கவனமாக தேர்ந்தெடுங்கள். கிருஷ்ணரை வணங்குவது பரிகாரமா கும்.

**செவ்வாய்:** இவர் 8 ஆம் அதிபதியாகி, 11 இல் அமர்ந்துள்ளதால், ஒரு நன்மை, அரசியலில் உள்ளவர்கள் குறுக்கு வழியில் பதவியைபிடிப்பர். மற்றொன்று வயதில் மூத்த அரசியல்வாதி அடிபடுவார். இவர் சனியோடு இருப்பதால் பைரவரை வழிபடுவது பரிகாரமாகும்.

**புதன்:** புத்திசாலி மற்றும் வேலைக்குரிய இந்த கிரகம் நீசபங்கம் பெற்று உள்ளார். இதனால் இளைஞர்கள், ஒரு வேலையில் பொருந்தி இருக்க மாட்டார்கள். மாறிக்கொண்டே இருப்பர். நீங்கள் கூலி வேலை செய்தாலும், கம்யூட்டரில் பெரிய பதவி வகித்தாலும் ஒரு இடமாக இருக்கமாட்டார்கள். அலைபாய் வீரகள்.

**குரு:** இவர் உச்ச சூரியனுடன் அமர்ந்துள்ளார். மற்றும் சனியின் பார்வையை பெறுகிறார். ஆனால் இந்த வருடம், சனியின் பார்வையால் சூரியன், குரு ரொம்ப அவஸ்தைக்கு ஆளாக மாட்டார்கள். உச்ச சூரியன் மிக பலமாக, வலுவாக இருப்பதால் சனி சற்று அடக்கி வாசிப்பார். எனவே குருவும் தன் பலம் இழக்காமல் இருப்பதால் தான தர்மம், பொருளாதார மேன்மை, நிறைய கோவில் நிர்மானம். கௌரவப் பதவிகள் உண்டாதல், கல்வி மேன்மை இவற்றை மக்கள் அனுபவிப்பர்.

**சுக்கிரன்:** இவரும் உச்சமாகி, ராகுவுடன் உள்ளார். கலை உலகம் சிறக்கும் மக்கள் [illegible] இருப்பர். [illegible] இருக்கும். அடுக்குமாடி விற்பனை, அதிவேக வாகன விற்பனை செழிக்கும். சுக்கிரன் உச்சமாகி ராகுவுடன் சேர்ந்திருப்பதால், ஒழுக்கம் என்பது கேள்விக் குறியாகிவிடும். இந்த ஒழுக்கக்கேடு, நிறைய விவாகரத்தை கொண்டுவரும்

**சனி:** சனியின் இருப்பை இருவிதமாக கொள்ளலாம். ஒன்று அவர் கர்ம, லாபாதிபதியாகி ஆட்சி. இன்னொன்று பாதகாதிபதி ஆகி வலுவாக உள்ளார். ஒரு வழியில் நன்மையும் மறுவழியில் சற்று மைனஸ்ஸும் உண்டு. கூடவே இருக்கும் செவ்வாய், கெடுபலன் செய்ய தூண்டுவார். தொழில் சம்பந்த தொல்லை இருக்கும். அனைவரும் ஏதோ ஒரு மறைமுக எதிரியால் தொல்லைக்கு ஆளாவார்கள். இந்த சனி + செவ்வாய் இணைவு நிறைய காதல் உருவாக்கும். அந்த காதலில் உண்மைத் தன்மை குறைவாக இருக்கும். அனைவருமே இந்தாண்டு சனிக்கிழமைகளில் பைரவருக்கு நல்லெண்ணெய் தீபமேற்றிவிடுங்கள். திருட்டு அதிகரிக்கும்.

**ராகு:** ராகுபகவான், காலபுருஷனின் 12 ஆம் இடத்தில் உச்ச சுக்கிரன், நீசபங்க புதனுடன் உள்ளார். இதனால் நிறைய முறையற்ற கள்ள உறவுகள் அதிகரிக்கும். கள்ளக் கடத்தல் கடல்வழியாக நடக்கும். இந்த வருடம் வெள்ளி நகை கடத்தல் அதிகரிக்கும். கற்பழிப்புகள் நிறைய நடக்கும். சட்டப்புறம்பான இரகசிய நடவடிக்கைகள் அதிகமாகும். மது உபயோகம் மிக அதிகமாகும். ராகு + சுக்கிரன் இணைவு நல்லதல்ல. பெண்களை வஞ்சகமாக ஏமாற்றி சீரழிக்கும். எனவே உங்கள் வீட்டு இளம் பெண்களை மிக பத்திரமாக காப்பாற்ற வேண்டும். துர்க்கையை வணங்கவும்.

**கேது:** கேது காலபுருஷனின் 6 ஆம் வீட்டில் உள்ளார். நோய் பரவலை கட்டுப்படுத்துவார். வேர் சம்பந்தமான மூலிகை பயன்பாட்டினை பரவலாக்குவார். மக்களை உழைக்கவிடாமல், சற்று சோம்பேறி ஆக்குவார். ஆனால் உழைக்காமல் பணம் குறுக்குவழியில் சம்பாதிப்பது எப்படி என நிறைய ஐடியா கொடுப்பார். கடன்களை ரொம்ப வளர விடமாட்டார். உங்கள் ஊரில் உள்ள பிரசித்தமான விநாயகரை வணங்குங்கள்.

இந்த 2024 ஆம் வருடம் பிறக்கப்போகும். குரோதி தமிழ் புத்தாண்டு. இரண்டு கிரக உச்சம், ஒரு நீசபங்க ராஜயோக கிரகத்தையும் தன்னுடைய கோட்சாரமாகக் கொண்டுள்ளது. சூரியன்+குரு இணைவு மிகுந்த நன்மை தரும். ஆனால் ராகு+உச்ச சுக்கிரன்+புதன் சேர்க்கை கொஞ்சம் திகிலாக இருக்கிறது. அதுபோல் சனி+ செவ்வாய் சேர்க்கையும் நன்மையாக படவில்லை. எனவே இந்த வருடம் நன்மை எவ்வளவு அதிகம் தருமோ, அதே அளவு கெடுதலும் முன்னின்று பயமுறுத்துகிறது.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் ராகு புதன்(வ) | சூரியன் குரு | | சந்திரன் |
| சனி செவ்வாய் | | | |
| | | | |
| | | | கேது |

அவரவர் குடும்ப இளம் பெண்களையும், இளைஞர்களையும், குழந்தைகளையும் நீங்கள் தான் பத்திரமாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

**பரிகாரங்கள்**

எந்த கோவில் சென்றாலும் தீபமேற்றி வணங்குங்கள். பைர வரை கண்டிப்பாக வணங்க வேண்டும்.

மகாலட்சுமியுடன் கூடிய விஷ்ணு அல்லது ஸ்ரீதேவி, பூதேவியுடன் கூடிய பெருமாள் கோவில் சென்று வழிபட்டு, கருடனுக்கு விளக்கேற்றலாம். சூரிய வழிபாடு நன்று.

மஹிஷாஸுர மர்த்தினியை நன்கு, குங்குமம் அரளிப்பூ, எலுமிச்சை இவை காணிக்கை யாக்கி வணங்கவும். அவள் ஒருவளால் தான் ராகு, உச்ச சுக்கிர சேர்க்கையின் எதிர்மறைத் தன்மையை விலக்க முடியும். பசுவிற்கு அருகம்புல் கொடுங்கள்.

இந்த வருடம் முன்பின் தெரியாதவர்களிடம் இளம் பெண்கள் கண்டிப்பாக பழக வேண்டாம்.

இந்த பயங்களை எல்லாம் சூரியன்+குரு இணைவு சரி பண்ணி, அனைவருக்கும் நிறைய வாழ்வை தரும்.

**வானிலை:** இந்த குரோதி தமிழ் வருடத்தில் நெருப்பு ராசியில், நெருப்பு கிரகம் சூரியன் உச்சம். எனவே வெயில் அடித்து கொளுத்தும் நீர் ராசியான மீனத்தில், நீர்க்கிரகம் சுக்கிரன் உச்சம். உடன் பெரும் போக்க கிரகம் ராகு. எனவே மழை கடினமாக பொழியும். மேலும் நீசபங்க ராஜயோகம் பெற்ற புதனும் இருப்பதால், பெருங்காற்றும் மழையும் சேர்ந்திருக்கும்.

காற்று ராசியான கும்பத்தில் காற்று கிரகம் சனியும், நெருப்பு கிரகம் செவ்வாயும் உள்ளனர். எனவே காற்றில் ஈரப்பதம் குறைந்து, வெப்பம் அதிகமாக இருக்கும்.


மிதுனம் எனும் காற்று ராசியில், நீர்க்கிரகம் சந்திரன் உள்ளார். எனவே காற்றில் ஈரப்பதம் மிகும்.

இதிலிருந்து இந்த வருடம் மழை பெய்தால் அது சாதாரண மழையாக இராமல், புயல் போன்று பெரும் மழையாக இருக்கும்.

வெயில் என்றாலும், மிகுந்த வெப்பமாக சுளீர் வெயில் இருக்கும். சித்திரை 1, 9 வரை, ஏப்ரல் 14, 22 வரை சனி +செவ்வாய் இணைவு உள்ளது. அப்போது நில அதிர்வு ஏற்படக்கூடும்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்-சிவசாந்தன்)


# குரோதி தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு ஆலயங்களில் விசேட வழிபாடு



(யாழ்ப்பாணம்)

மலர்ந்துள்ள குரோதி தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு நேற்று நாடளாவிய ரீதியில் உள்ள ஆலயங்களில் விஷேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அந்த வகையில் பிரசித்தி பெற்ற யாழ்.நல்லூர் முருகன்,நயினாதீவு நாகபூசணி அம்பாள், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்,மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயங்களில் விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-33)



# யாழ்.நகரப் பகுதிகளுக்கு கள விஜயம் செய்த அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தின் சுகாதார நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவற்றை தூய்மையாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளார்.

புது வருடப் பிறப்பு தினமான நேற்று காலை யாழ். நகரத்தில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட வேளை நகரின் மையப்பகுதி மற்றும் புதிய மாநகரசபை கட்டட வளாகம் அதனை அண்டிய சுற்று வட்டத்தின் நீர் வடிந்தோடும் வடிகால்கள் உள்ளிட்டவற்றை அமைச்சர் பார்வையிட்டார்.

யாழ். நகரின் தூய்மை பராமரிப்பு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் எழுந்துள்ள நிலையிலேயே, அது தொடர்பில் ஆராய்வதற்காகவே அமைச்சர் இந்த கள விஜயத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-33)

# ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் முற்றாக புறக்கணிக்க வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்கள் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொது வேட்பாளர் பகிஷ்கரிப்பு தொடர்பில் யாழில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

75 வருடங்களாக ஆட்சிக்கு வந்த பேரினவாத தலைவர்கள் ஒருபோதும் தமிழ் மக்களுடைய நலன்கள் தொடர்பில் கருத்தில் கொள்ளவில்லை. ஆட்சியாளர்கள் மக்களுடைய வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெறுவதையே முதன்மையாகக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழர்கள் ஜனாதிபதி தேர்தலிலிருந்து முற்றாக விலகியிருப்பதன் மூலமே தமிழ் மக்கள் தமக்கான உரிமையை நிலை நாட்ட முடியும் என்பது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய நிலைப்பாடு.

தமிழ் மக்களது ஆதரவோடு வெற்றி பெற்ற ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை மூடிமறைத்து சர்வதேச குற்ற விசாரணை என்ற பொறிமுறைக்குள்செல்லாது உள்ளக விசாரணைக்குள் முடக்கி தமிழர்களுக்கு ஏமாற்றம் அளிக்கின்ற செயற்பாட்டையே முன்னெடுத்து வந்திருக்கின்றார்கள்" என மேலும் தெரி[illegible]


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியரான
திருமதி.**வளர்மதி ராஜ்குமார்** அவர்களின்
அன்புத் தாயார்

அமரர்.**சுமதி தேவேந்திரன்**

அவர்கள் 13.04.2024
(சனிக்கிழமை)
காலமானார்.அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா
சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். [சி-0140]



யாழ். இந்து மகளிர் கல்லூரி சமூகம்.


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 170 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 150 | 200 |
| தக்காளி | 100 | 100 | 130 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 130 | 140 | 160 |
| கோவா | 150 | 150 | 200 | 250 |
| கரட் | 400 | 480 | 350 | 400 |
| பூசணி | 150 | 130 | 140 | 120 |
| புடோல் | 100 | 200 | 120 | 100 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 350 | 380 | 400 | 400 |
| பாகற்காய் | 250 | 300 | 300 | 250 |
| வெண்டக்காய் | 150 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 200 | 120 | 150 |
| பயற்றங்காய் | 300 | 250 | 250 | 150 |
| லீக்ஸ் | 350 | -- | 250 | 400 |
| பீற்றூட் | 200 | 250 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 600 | 800 |
| போஞ்சி | 350 | -- | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 160 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 450 | 350 |
| வெங்காயப்பூ | -- | -- | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | [illegible] | [illegible] | 120 | [illegible] |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு, தன்நிறைவு பெற்ற பொருளாதார அமைப்பைக் கொண்ட நாட்டை உருவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



நேற்று விடுத்துள்ள ஊடக அறிவித்தல் ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இது தேர்தல் ஆண்டாகும் எனவும், மக்கள் எதிர்பார்க்கும் அரசாங்கம் நாட்டில் அமையும் என்பது தமது நம்பிக்கை எனவும் தெரிவித்துள்ள அவர், வளமான யுகத்தை உருவாக்குவதற்கு தாங்கள் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (5-6)

# சுமார் 3 கோடி பெறுமதியான போதை மாத்திரைகள் மீட்பு

(கொழும்பு)

சுமார் 75 கொக்கெய்ன் போதை மாத்திரைகளை விழுங்கிய நிலையில் விமான நிலைத்திற்கு வந்த வெளிநாட்டுப் பெண்ணொருவர் விமானநிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கடந்த வெள்ளிக்கிழமை விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மடகஸ்காரைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட கொக்கெய்ன் போதைப் பொருளின் பெறுமதி சுமார் 3 கோடியே 50 இலட்சம் ரூபாவென சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த பெண் எத்தியோப்பியாவில் இருந்து இந்தியாவுக்கு வந்து இந்தியாவின் மும்பையில் இருந்து இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

போதைப்பொருளை விழுங்கிய நிலையில் கைது செய்யப்பட்ட பெண்ணை நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று விழுங்கிய கொக்கெய்ன் மாத்திரைகளை வெளியேற்றினர்.

இதையடுத்து மேலதிக விசாரணைகளுக்காக குறித்த பெண் கொக்கெய்ன் போதை மாத்திரைகளுடன் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (5-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1987-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா:62 1/2 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: A/L, Company Supervisor(Canada)<br>எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14457 | பிறப்பு -1995- இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: -<br>உயரம் : 165CM<br>தகைமை/தொழில்: Srilanka Government Nures<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் வெளிநாடு எனின் Citizen இருக்க வேண்டும்<br>தொ.இ: G/14492 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா: 13<br>உயரம்: 175CM<br>தகைமை/தொழில்:பட்டதாரி (சுவிஸ்)<br>எதிர்பார்ப்பு: சுவிஸ் உள்ளவர் விரும்பத்தக்கது. IT Field<br>தொ.இ: B/14458 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 60<br>உயரம்: 152 CM<br>தகைமைதொழில்பட்டதாரி Executive(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்/வெளிநாடு ஆயின் லண்டன், அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/14495 |
| பிறப்பு:-1991-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 36<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில் A/L நகைவேலை (Own)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14459 | பிறப்பு -1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 28 1/2<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: BBM , DO<br>எதிர்பார்ப்பு: Engineer, DO, Lecturer<br>தொ.இ: G/14496 |
| பிறப்பு: 1998-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: -<br>உயரம்:5' 8"<br>தகைமை/தொழில்:-Diploma in English& Hardware , Team Leader<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இல: B/14462 | பிறப்பு -1998-இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 56 1/2<br>உயரம்: 158 CM<br>தகைமை/தொழில்: BBM,MA<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், IT Field,Banker<br>தொ.இ: G/14499 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இராசிபலன்

15.04.2024
சித்திரை 02, திங்கட்கிழமை
சப்தமி பிற்பகல் 5.00 மணிவரை

பூநர்பூசம் முழுவதும்
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம்-7.34- 9.04 மணிவரை

சந்திராஷ்டமம்
விசாகம்

வளவன்



**மேஷம்** — ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உறவினர்கள் உங்களுக்கு பக்கபலமாக நடந்து கொள்வர்.



**கடகம்** — காரிய அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், சயனசுகக் குறைவான நாள்.



**துலாம்** — பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.



**மகரம்** — தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும், கடன் பிரச்சினைகளைத் தீர்க்க சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிப்பீர்கள்.



**ரிஷபம்** — வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.



**சிம்மம்** — உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் வாய்ப்புண்டு.



**விருச்சிகம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.



**கும்பம்** — பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள், தொழில் சம்பந்தமாக அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.



**மிதுனம்** — எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.



**கன்னி** — செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், கௌரவமான நாள்.



**தனுசு** — அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், உறவினர்கள் உங்கள் வீட்டுக்குத் திடீரென வரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



**மீனம்** — மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகத்தால் வளம் காணும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# அண்ணல் அம்பேத்கரின் 134 ஆவது பிறந்தநாள்



(டில்லி)

அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு, இந்திய பிரதமரும் இந்திய ஜனாதிபதியும் அம்பேத்கரின் சிலைக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

அண்ணல் அம்பேத்கரின் 134 ஆவது பிறந்தநாளான நேற்று பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்கள், அவரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிலையில், டில்லி பாராளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அம்பேத்கரின் சிலைக்கு பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி திரவுபதி முர்மு ஆகியோர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். (5-6)

# மத்திய தரைக்கடல் பகுதியில் 4 பெண்கள் சடலமாக மீட்பு

(மார்டிட்)

ஸ்பெயினின் முர்சியா நகரின் அருகே உள்ள மத்திய தரைக்கடல் பகுதியில் ஒரு படகு தத்தளித்தபடி மிதந்து வந்ததை அந்நாட்டு கடற்படையினர் கண்டறிந்தனர்.

படகுக்கு அருகில் சென்று பார்த்தபோது அதில் 4 பெண்கள் சடலமாக கிடந்தது தெரிய வந்தது.

இதையடுத்து அந்த படகை கார்டஜினா துறைமுகத்திற்கு மீட்புக்குழுவினர் மீட்டு கொண்டு சென்றுள்ளனர்.

படகில் இருந்த பெண்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவர்களின் இறப்புக்கான காரணம், பிரேத பரிசோதனைக்கு பிறகே தெரிய வரும்.

அவர்கள் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும், அங்கிருந்து புலம்பெயர்ந்து ஸ்பெயினில் குடியேறுவதற்காக படகில் வந்தபோது இறந்திருக்கலாம் என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (5-6)


# இஸ்ரேல் மீது ஏ

# பாரிய விளைவுகளை

## ஈரானை எச்சரித்த இஸ்ரேலி

(ஜெருசலேம்)

**இஸ்ரேல் மீது ஈரான் 200 இற்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் ஏவுகணைத் தாக்கு நடத்தியுள்ளது. தாக்குதலின் பாரிய வி ஈரான் சந்திக்க நேரிடும் என இஸ்ரேலிய இரா உயர் அதிகாரி டேனியல் ஹகாரி எச்சரிக் துள்ளார்.**



அதன்படி நேற்றுமுன்தினம் இரவு ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைகளை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிரியாவில் உள்ள ஈரான் துணைத்தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஏழு இஸ்லாமிய பொலிஸ் உறுப்பினர்கள்

# உலகின் வயது முதிர்ந்த ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் மரணம்

(வோஷிங்டன்)

உலகின் வயது முதிர்ந்த ஒட்டிப் பிறந்த இரட்டையர் என்ற உலக சாதனையுடைய இரட்டையர்கள் உயிரிழந்துள்ளனர்.

லோரி மற்றும் ஜோர்ஜ் ஸப்பால் என்ற இரட்டையேரே இவ்வாறு தங்களது 62 ஆவது வயதில் உயிரிழந்துள்ளனர்.

பென்சில்வேனிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இருவரும் உயிரழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் மரணத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இவர்கள் இருவரும் 30 ஆண்டுகளே உயிர் வாழ



முடியும் என மருத்துவர்கள் எதிர்வுகூறியிருந்த நிலையில், இருவரும் 62 வயது வரையில் உயிர் வாழ்ந்துள்ளனர்.

இந்த இருவரும் 30 வீதமான மூளையையும் சில இரத்த நாளங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

லோரி பூரண வளர்ச்சி அடைந்த போதிலும் ஜோர்ஜினால் பூரணமான உடல் வளர்ச்சியை பெற்றுக்கொள்ள முடியவில்லை.இந்த இரட்டையர்களின் மண்டையோட்டுப் பகுதி ஒட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# தமிழகத்தில் தீவிரமன குவிக்கப்பட்ட பாதுக

(டில்லி)

தமிழகத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ள பின்னணியில் தற்போது பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆந்திரா, கேரளா, தெலுங்கானா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் உள்ள 10 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக தமிழகத்தில் களமிறங்கவுள்ளனர்.

மக்களவைத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளுக்கும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் இதற்கான ஏற்பாடுகளை இந்திய தேர்தல் ஆணையம் முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது.



இந்த நிலையில், அரசியல் தரப்பினர் பணம் மற்றும் பரிசுப் பொருட்களை கொடுத்து வாக்குகளை கவர்வதைத் தடுக்க தமிழகம் முழுவதும் 900 இற்கும் மேற்பட்ட தேர்தல் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த பறக்கும் படையினர் சுழ


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈரான் தாக்குதல்

# ளை சந்திக்க நேரிடும்

## லிய இராணுவ உயர் அதிகாரி

### பட்ட ஆளில்லா
### தாக்குதல்களை
### விளைவுகளை
### இராணுவத்தின்
### ரிக்கை விடுத்



கொல்லப்பட்டு சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் 10 இற்கும் மேற்பட்ட க்ரூஸ் ஏவுகணைகள் அடங்கியுள்ளதாகவும் எனினும் இந்த தாக்குதலில் 7 வயது சிறுமி ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஈரான் இந்த தாக்குதலுக்காக 200 இற்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இஸ்ரேலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஈரான் பிராந்தியத்தில் வன்முறையை அதிகரித்தால் அதன் விளைவுகளை சந்திக்க நேரிடும். என்று இஸ்ரேலிய இராணுவத்தின் உயர்மட்ட செய்தி தொடர்பாளர் டேனியல்ஸ் ஹகாரி எச்சரிக்கை விடுத்து உள்ளார். (5-6)

# கேபிள் கார் அறுந்து விபத்து

- ஒருவர் பலி
- 7 பேர் படுகாயம்
- 174 பேர் உயிருடன் மீட்பு



(அங்காரா)

துருக்கியில் கேபிள் கார் ஒன்று பாறை மீது மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

துருக்கியின் அன்டலியா நகரில் உள்ள மலையில் கேபிள் கார் வசதி உள்ளது.

2,010 அடி உயர மலை உச்சியில் உள்ள உணவகம் மற்றும் சுற்றுலா தலத்திற்கு கொன்யால்டி கடற்கரையிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கேபிள் கார்கள் மூலம் செல்கிறார்கள்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கேபிள் கார் ஒன்று அறுந்து விழுந்து பாறை மீது மோதியதில் ஒருவர் பலியானதோடு 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தால் கேபிள் கார்களை இயக்க முடியாத காரணத்தால் மலைக்கு மேல் கேபிள் கார்களில் 174 பேர் சிக்கித் தவித்தனர்.

அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதில் மீட்புக் குழுவினர் 600 பேர் மற்றும் 10 ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன.

சுமார் 23 மணி நேரத்துக்கு பிறகு சுற்றுலா பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். (5-6)

# மடையும் தேர்தல் களம்

# துகாப்பு படையினர்



ற்சி முறையில் 24 மணி நேரமும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமைதியான முறையில் தேர்தலை நடத்தும் வகையில் 190 துணை இராணுவப் படையினர் தமிழகத்துக்கு ஏற்கெனவே வரவழைக்கப்பட்டு மாவட்ட வாரியாக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 1 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழக காவல்துறையினரும் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள் ஊர்க்காவல் படையினர் உட்பட மேலும் பல பிரிவினரும் வாக்குப் பதிவு தினத்தன்று பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை தமிழகம் முழுவதும் உள்ள 8 ஆயிரத்து 50 வாக்குச்சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய துணை இராணுவப்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# போர்ச்சூழலை பெரிதாக்கும் ஈரானின் தாக்குதல் நடவடிக்கை

## ரிஷி சுனக் கண்டனம்



(லண்டன்)

இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல்களை முன்னெடுத்துள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பில் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் எக்ஸ் பக்கத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பிரதமர் ரிஷி சுனக், குறித்த தாக்குதலானது பதற்றங்களைத் தூண்டி, பிராந்தியத்தை சீர்குலைக்கும் அபாயம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் குழப்பத்தை விதைக்கும் நோக்கத்தில் உள்ளது என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளது.

இந்த இக்கட்டான கட்டத்தில் இஸ்ரேலின் பாதுகாப்புக்கு ஆதரவளிக்கப்படும் என்றும், அத்துடன் ஜோர் தான் மற்றும் ஈராக் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும், நட்பு நாடுகளுடன் சேர்ந்து, நிலைமையை கட்டுப்படுத்தவும், மேலும் தீவிரமடைவதைத் தடுக்கவும் பிரித்தானியா அவசர நடவடிக்கை முன்னெடுக்கும் என்றும் ரிஷிசுனக் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## குங்குமப்பூ



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவார தொடர்ச்சி)

அத்தகைய பெண்களுக்கு குங்குமப்பூக்களை பசுப்பாலில் கலந்து சில நாட்கள் கொடுத்தால் பருவமடைவர்.

குங்குமப்பூவில் தேனைவிட்டு நன்றாக அரைத்து சாந்து போலாக்கி ஆண்குறி, பெண் குறி ஆசனவாய் ஆகிய காயம் உள்ள இடத்தில் பூசி வந்தால் காயங்கள் ஆறிவரும்.

மதனகாமப்பூவுடன் குங்குமப்பூ, மராட்டி மொக்கு இவற்றை சம எடை எடுத்து முருங்கைப் பூ சாற்றால் அரைத்து சிறிய மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி எடுத்து வைக்க வேண்டும். காலையும் மாலையும் ஒவ்வொரு மாத்திரையை பசும்பாலுடன் சாப்பிட்டு வந்தால் தாது பலமுண்டாகும்.

குங்குமப்பூ 35 கிராம், சுக்கு, திப்பிலி, மிளகு, சாதிக்காய், கிராம்பு,ஏலம், சந்தத்தூள், கடுக்காய், தான்றிக்காய், நெல்லி வற்றல், தேவதாரு வகைக்கு 17 கிராம் எடுத்து கோரோசணை 8.5 கிராம் சேர்த்து சூரணத்து கலவத்தின் போட்டு எலுமிச்சம் பழச்சாறு, இஞ்சிச்சாறு, கண்டங் கத்திரிப் பழச்சாறு இவற்றால் முறையே அரைத்து குழந்தை கட்டு 65 மி.கி பிரமாண மாத்திரையாகவும், பெரியவர்களுக்கு 130மி.கி மாத்திரையாகவும் கொடுக்க ஜலதோஷம்,சுரம், நாவரட்சி,சிரசுபாரம்,தலைவலி, சூதகக்கட்டு என்பன இல்லாது போகும்.

குங்குமப்பூ, சர்க்கரை வகைக்கு ஐந்து கிராம் அளவால் இவற்றை கல்வத்திலிட்டு சிறிது பசும்பால் விட்டு நெகிழ அரைத்து பசும்பாலில் கலக்கிவிடவும். பின் அதனுடன் தேங்காய் எண்ணையினை கூட்டி பதமுறக் காய்ச்சி வடிகட்டி பத்திரப்படுத்துக. இதனை நாசியால் 5-6 துளிவிட்டு கொண்டு வர சகல பீனிச ரோகமும் ஒழியும்.

பூனைக்கண் குங்கிலியம்-5 கிராம்.சாதிக்காய்-2 கிராம், கருஞ்சீரகம்-2 கிராம், குங்குமப்பூ-1/2 கிராம், கோரோசணை-1/2 கிராம், எக்கராகாரம்-1 கிராம், பளிங் குமைபிராணி-1 கிராம், பழைய நல்ல வெல்லம் 1 கிராம் இவற்றை தனித் தனியே இடித்து சலித்து பின்னர் கல்வத்திலிட்டு போதிய தேன் விட்டு அரைத்து மெழுகு பதத்தில் எடுக்க வேண்டும். 3-5 கிராம் வரை தினமும் இரு வேளை பாலுடன் அருந்த தாது விருத்தி அடைந்து ஆண்மை பலப்படும்.

பிரசவித்த பெண்களின் கருப்பைப்புண்கள் ஆறவும்,வயிற்று நோ மாறவும், கருப்பை அழுக்குகள் வெளியேறவும், பசி எடுப்பதற்கும், புஷ்டியை ஏற்படுத்துவதற்குமென சாராய ஊறல் பருகக் கொடுக்கும் வழக்கமும் எமது மக்களிடையே காணப்படுகிறது.

இது பிரசவத்தின் பின் ஏற்படும் குளிர் சன்னி ஏற்படாமல் தடுக்க உதவும். சாராய ஊறலில் சேர்க்கப்படும் 21 சரக்குகளில் குங்குமப்பூவும் ஒன்றாகக் காணப்படுகிறது.

### தரமான குங்குமப்பூவினை இனங்காணல்

குங்குமப் பூவிதழ் ஒன்றை நீரில் போட்டால் அது வெதும்பி பெருக்கும். சுற்றிலும் உள்ள ஆழமான நீரில் மஞ்சள் நிறத்தினை உருவாக்கும். பொதுவாக 50 மில்லிலீற்றல் நீரில் 10 மில்லிகிராம் குங்குமப் பூவினை போட்டால் ஊதா நிறம் தரும், சிவப்பு நிறம் தரும். இன்றைக்கு 3000 வருடங்களுக்கு முன்பே ஞாழல்பூ என்று சித்தர்களால் குங்குமப்பூ பயன்படுத்தப்பட்டுள்ளது.





### தரமான குங்குமபூவினை பெறு வதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்.

வளரியல்பு,தரமான கிழங்கினை இனவிருத்தி செய்தல், பராமரிப்பு, அறுவடைக்காலம், சூலக மூடி சேகரிக்கும் முறை, களஞ்சியப்படுத்தும் முறை, சேகரித்து வைத்திருக்கும் கால அளவு.

தரமான குங்குமப்பூவினை பெற்று கொள்வதில் மேற்கூறியவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(முற்றும்)

# இன்று ஒரு தகவல் 95



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சமாளிப்பு

சமாளிப்பு என்பது ஒரு தனி சமார்த்தியம். அது எல்லோருக்கும் சுலபமாக வந்து விடாது! சில பேருக்கு அது கைவந்த கலையாக இருக்கும். முக்கியமான கலைஞர்களுக்கு இந்த சாமர்த்தியம் மிகவும் அவசியம்.

இப்போது எல்லாம் வானொலி நாடகங்களை முன்னாடியே ஒலிப்பதிவு செய்து இசையெல்லாம் சேர்த்து அழகு செய்து டேப்பிலே தயாரித்து தேவையான நேரத்திலே ஒலிபரப்பு செய்கிறார்கள்!

முன்னர் எல்லாம் இந்த வசதி இல்லை. நேரடியாகவே வசனம் பேசி நடிக்க வேண்டும். அப்படியே அது ஒலிபரப்பாகும். தேவைப்படுகின்ற நேரத்திலே இசை சத்தம் இதையெல்லாம் தனியாக ஒருத்தர் போட்டுக் கொண்டு இருப்பார். கதாநாயகன் தேநீர் ஆற்றுகின்றார் என்றால் நிஜமாகவே ஒருத்தர் தனியாக ஒரு மைக் முன்னாடி தேநீரையோ தண்ணீரையோ ஆத்தி அந்த சத்தத்தை உண்டாக்கிக் கொண்டு இருப்பார். இப்போது என்ன என்றால் அந்த சத்தத்தை தனியாக Record செய்து கொண்டு வசனத்தோடு சேர்த்துவிடலாம்.

அந்த நாட்களிலே இதையெல்லாம் ரொம்பவும் எச்சரிக்கையோடு செய்ய வேண்டும். ஏதாவது தப்பாக ஒலிபரப்பு ஆகிவிட்டதென்றால் அதை திருத்துவதற்கு வழியே இல்லையே!

காற்றிலே போனது போனது தானே! அது மாதிரி சமயத்திலே சமாளிப்பு மிகவும் அவசியம். அந்தக் காலத்திலே. அரை மணிநேர நாடகம் ஒன்று நடந்து கொண்டு இருக்கிறது. நேரடியாக ஒலிபரப்பாகிக்கொண்டு இருக்கிறது!

டிகே சண்முகமும் திரௌபதியும் நடித்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஒரு இடத்திலே குழந்தை வீறிட்டு அழவேண்டும். உடனே கணவன் மனைவியை பார்த்து பொறுப்பில்லாமலே குடும்பம் நடத்துகிறதா என்று பேச வேண்டும் இது தான் சீன்.

ஒரு இசைத்தட்டிலே Effect எல்லாம் பதிவு செய்து இருக்கும். அதில் குழந்தை அழும் சத்தம் நாய் குறைக்கும் சத்தம். ரயில் போகும் சத்தம். பூனை கத்தும் சத்தம். இப்படி நிறைய இருக்கும் அதில் குழந்தை அழும் சத்தத்தை ஒருவர் அந்த நேரத்தில் போட வேண்டும்.

அந்த இசைத்தட்டிலே அது இரண்டாவது கட்டம். ஆனால் அந்த ஆள் தவறுதலாக மூன்றாவது கட்டத்தை போட்டு விட்டார். என்ன ஆகிவிட்டது தெரியுமா? குழந்தை அழுவதற்கு பதிலாக நாய் குரைக்க ஆரம்பித்து விட்டது. எல்லோரும் பதறிப் போய் விட்டார்கள். என்ன செய்வது என்று புரியவில்லை. அப்போது நாடக தயாரிப்பாளராக இருந்த பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் திகைத்துப்போய் T.K.S முகத்தை பரிதாபமாக பார்த்தார். T.K சண்முகம் சொஞ்சம் கூட பதற்றமில்லாமல் இப்படி ஆரம்பித்தார். ஏன்டி வாழும் வீட்டில் நாயை கொண்டு வந்து வளர்க்க வேண்டாம் என்று எத்தனை தடவை நான் சொல்றது? குழந்தை அழுகின்ற சத்தத்தை கூட நாய் சத்தம் அடக்கி விட்டது பார்த்தியா.. என்றார்.

ஒலிபரப்பு அறைக்குள்ளே நடந்த ஒரு தவறு வெளி உலகத்திற்கு தெரியாமல் போய்விட்டது. இதற்குக் காரணம் அந்த கலைஞரோட புத்திசாலித்தனமான சமாளிப்பு.

இதே மாதிரித்தான் 1959 இல் ஒரு வரலாற்று நாடகம் நடந்து கொண்டிருக்கிறது.

இளவரசர் போரிலே வெற்றி பெற்று வந்து கொண்டிருக்கிறார். அப்படி என்று சொல்ல வேண்டியவர் மைக் முன்னாடி வந்தார்.


அரசே இளவரசர் தோற்றுப் போய் வந்து கொண்டிருக்கிறார். அப்படி என்று தப்பா சொல்லிவிட்டார்.

நாடக தயாரிப்பாளர் எஸ். கந்தசாமி- துறைவன் இதைக் கேட்டவுடனே எழுந்து மைக் முன்னால் ஓடி வந்து நின்றார்.

இளவரசர் தோற்கவில்லை. வெற்றி வாகை சூடி விரைந்து இங்கு வந்து கொண்டிரு க்கின்றார். எதிரியின் ஒற்றன் இவன் பொய் சொல்லி ஓடப்பார்க்கின்றான் இவனுக்கு சரியான தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொல்லி விட்டு அடிக்க ஆரம்பித்துவிட்டார். அதனாலே நாடகம் அடிபட்டு போகாமல் ஒலிபரப்பு ஆகி விட்டது.

இது மாதிரியான சாமர்த்தியமான சமாளிப்புக்கள் பெரிய தவறுகள் எல்லாம் வெளியே தெரியாமல் காப்பாற்றுவதற்கு உதவியாக இருந்து இருக்கிறது. ஒரு வேளை நாடகம் கலைவாணர் N.S.K நடித்துக் கொண்டு இருக்கின்றார். அவர் இன்னொருவரைப் பார்த்து வசனம் பேசுகிறார். அடிக்கிற அடியிலே பல்லு 31 உம் உடைந்து விடும் என்று சொல்லி விட்டார். அவருடன் நடித்துக் கொண்டு இருந்தவர் சிரித்துக் கொண்டே ஒரு பல்லை விட்டுவிட்டீர்களே என்றார் கலைவாணர். பார்த்தார் அந்த ஒரு பல்லிலே பல்லு வலி வந்து நீ சாக வேண்டும் அதற்காகத் தான் விட்டு வைத்து இருக்கின்றேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா வைரவ புளியங்குள ஆதி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:-வசந்தரூபன்)

# இருளில் மூழ்கிய அதிவேக நெடுஞ்சாலை

(கொழும்பு)

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் பெரும்பாலான பகுதிகள் மின்கம்ப ங்களின் மின்குமிழ்கள் இய ங்காததால் இருளில் மூழ்கி இருந்துள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள் ளது. மின்சாரக் கேபிள்கள் அறுந்து உள்ளமை மற்றும் நிலத்தடி கேபிள்கள் திருத்தப் பட்டுள்ளமை இதற்கான காரண ங்கள் என அதிகாரிகள் விளக்க மளித்து உள்ளனர்

கடந்த ஜனவரி மாதம் கட்டு நாயக்க அதிவேக நெடுஞ்சாலை யின் உயர் அழுத்த மின்சார கேபிள்கள் அகற்றப்பட்டதால் 286 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதேபோல் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் வெடிகந்த பிர தேசத்தில் கோடரியை பயன் படுத்தி நான்கு விளக்கு கம் பங்கள் திருடப்பட்டுள்ளன. இதனால் 2.4 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (5-6)

# கடந்த மூன்று நாட்களில் ரூ.126 மில்லியன் வருவாய்

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

(கொழும்பு)

நாட்டிலுள்ள நெடுஞ்சா லைகள் மூலம் கடந்த மூன்று நாட்களில் அதிக வருமானம் கிடைத்துள்ளதாக வீதி அபிவி ருத்தி அதிகார சபை தெரிவி த்துள்ளது.

இத் தகவலை நெடுஞ்சாலை செயற்பாடுகள் பராமரிப்பு மற் றும் முகாமைப் பிரிவின் பணிப்பாளர் ஆர். ஏ. டி. கஹட பிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, மொத்தம் 126 மில்லியன் ரூபாய் வருமானம் நெடுஞ்சாலைகளின் மூலம் பெறப்பட்டுள்ளதாக அவர் தெரி வித்துள்ளார்.

கடந்த 10, 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் குறித்த காலப்பகுதியில், 366,000 வாக னங்கள் நெடுஞ்சாலைகளில் பயணித்துள்ளதாக ஆர்.ஏ.டி. கஹடபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புத்தாண்டு விடுமுறையின் போது அதி வேக நெடுஞ்சாலை ஊடாக ஒன்றரை முதல் இரண்டு இல ட்சம் வரையிலான வாகனங் கள் பயணிக்கும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம். பி. சூரியபண்டார தெரிவித்திரு ந்தமை குறிப்பிடத்தக்கது.(5-6)

# அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவு ஊர்திப்பவனி

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் நினைவுகளை சுமந்த ஊர்திப் பவனி நேற்று முன்தினம் யாழ் ப்பாணத்தில் இருந்து பயண த்தை ஆரம்பித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் ஏற்பாட்டில் யாழ். நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவு முற்றத்தில் இருந்து ஆரம்பமான ஊர்திப்பவனி மட்டக்களப்பை சென்றடைய இருக்கின்றது.



ஆரம்ப நிகழ்வில் பாராளு மன்ற உறுப்பினர் செ.கஜேந் திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டி ருந்தன. (5-6-33)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3090

**ஆயிஸ்**




**தருணியா**




**யானு**




**சைத்திரா**




**வித்திஸ்**




**சாயித்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். இவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 455





மூதாட்டியின் பாதங்களைத் தொட்டுத் தம் கண்ணில் ஒற்றிக் கொண்டார். அவள் அந்தக் கரங்களைப் பிடித்துத் தன் முகத்தில் வைத்துக் கொண்டாள். இளவரசருடைய கரங்கள் விரைவில் அந்தப் பெண்ணரசியின் கண்ணில் பெருகிய நீரால் நனைந்து ஈரமாயின.

ஊமை ராணி சமிக்ஞையினால் இளவரசரையும் படுத்து உறங்கச் சொன்னாள். தான் காவல் இருப்பதாகவும் கவலையின்றித் தூங்கும்படியும் சொன்னாள். இளவரசருக்குத் தூக்கம் வரும் என்று தோன்றவில்லை. ஆயினும் அவளைத் திருப்தி செய்வதற்காகப் படுத்தார். படுத்து வெகுநேரம் வரையில் அவர் உள்ளக் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. பிறகு வெளியில் சிறிது குளிர்ந்த காற்று வந்தது. உடல் குளிரவே உள்ளம் குவிந்தது இலேசாக உறக்கமும் வந்தது.

ஆனால் உறக்கத்திலும் இளவரசரின் மனம் அமைதியுறவில்லை. பற்பல விசித்திரமான கனவுகள் கண்டார். அரபு நாட்டுச் சிறந்த குதிரை ஒன்றின் மீது ஏறி வான வெளியில் பிரயாணம் செய்தார். மேகமண்டலங்களைக் கடந்து வானுலகில் புகுந்தார். அங்கே தேவேந்திரன் அவரை ஐராவதத்தில் ஏற்றி அழைத்துச் சென்றான். தன்னுடைய இரத்தினச் சிங்காசனத்தில் அவரை உட்காரச் சொன்னான். "ஓ! இது எனக்கு வேண்டாம், இந்தச் சிங்காதனத்தில் என் பெரிய தாயார் ஊமை ராணியை ஏற்றி வைக்க விரும்புகிறேன்" என்று இளவரசர் சொன்னார். தேவேந்திரன் சிரித்து, "அவள் இங்கே வரட்டும் பிறகு பார்க்கலாம்" என்றான். தேவேந்திரன் இளவரசருக்குத் தேவாமிர்தத்தைக் கொடுத்துப் பருகச் சொன்னான். இளவரசர் அருந்திப் பார்த்துவிட்டு, "ஓ! இது காவேரித் தண்ணீர்போல அவ்வளவு நன்றாயில்லையே?" என்றார். தேவேந்திரன் இளவரசரை அந்தப்புரத்துக்கு அழைத்துப் போனார். அங்கே தேவ மகளிர் பலர் இருந்தார்கள். இந்திராணி இளவரசரைப் பார்த்து, "இந்தப் பெண்களுக்குள்ளே அழகில் சிறந்தவள் யாரோ அவளை நீர் மணந்து கொள்ளலாம்" என்றாள். இளவரசர் பார்த்துவிட்டு, "இவர்களில் யாரும் பூங்குழலியின் அழகுக்கு அருகிலும் வரமாட்டார்கள்" என்றார். திடீரென்று இந்திராணி இளைய பிராட்டியாக மாறினாள். "அருள்மொழி! என் வானதியை மறந்துவிட்டாயா?" என்று கேட்டாள்.

இளவரசர், 'அக்கா! அக்கா! எத்தனை நாளைக்கு என்னை நீ அடிமையாக வைத்திருக்கப் போகிறாய்? உன்னுடைய அன்பின் சிறையைக் காட்டிலும் பழுவேட்டரையரின் பாதாளச் சிறைமேல்! என்னை விடுதலை செய்! இல்லாவிட்டால் விராட ராஜனுடைய புதல்வன் உத்தர குமாரனைப் போல் என்னை அரண்மனையிலேயே இருக்கச் செய்து விடு. ஆடல் பாடல்களில் காலங்கழித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். இளைய பிராட்டி குந்தவை தன் பவளச் செவ்விதழ்களில் காந்தள் மலரையொத்த விரலை வைத்து அவரை வியப்புடன் நோக்கினாள். "அருள்மொழி! நீ ஏன் இப்படி மாறிப் போய்விட்டாய்? யார் உன் மனத்தைக் கெடுத்தார்கள்? ஆம், தம்பி! அன்பு என்பது ஓர் அடிமைத்தனம்தான். அதற்கு நீ கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும்" என்றாள். "இல்லை அக்கா, இல்லை! நீ சொல்வது தவறு. அடிமைத்தனம் இல்லாத அன்பு உண்டு. உனக்கு அதைக் காட்டட்டுமா? இதோ கூப்பிடுகிறேன் பார்!

(தொடரும்...)

எத்தனை ஆசாபாசங்கள், எத்தனை மகிழ்ச்சிகள், எத்தனை துயரங்கள், எவ்வளவு கோபதாப ஆத்திரங்கள் எல்லாவற்றையும் இவள் தன் உள்ளத்திலேயே அடக்கி வைத்திருக்கிறாள்! எத்தனை காலமாக அடக்கி வைத்திருக்கிறாள்!

ஊமை ராணி இடம் பெயர்ந்து இளவரசரின் அருகில் வந்து அமர்ந்தாள். அவருடைய தலைமயிரை அன்புடன் கோதிவிட்டாள். அவருடைய இரண்டு கன்னங்களையும் பூவைத் தொடுவது போல் தன் வலிய வைரமேறிய கரங்களினால் மிருதுவாகத் தொட்டுப்பார்த்தாள். இளவரசருக்குச் சற்று நேரம் என்ன செய்வது என்றே தெரியவில்லை. பிறகு அந்த



# சிறுவர் அரங்கம்

## சீலனின் தந்திரம்

(நேற்றைய தொடர்ச்சி)

என்தாயின் மீது வைத்துள்ள பாசத்தால் தான் அந்த ஓவியத்தைக் கொடுக்கும்படி கேட்கிறேன். எனக்காக உங்கள் கொள்கையைக் கொஞ்சம் தளர்த்துங்கள் என்று வேண்டினான்.



அவனுக்கு எப்படி உதவலாம் என யோசித்த சீலன், சக்தி நீ உன் தாயின் மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறாய் என்பது தெரிகிறது. அதனால் உனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறேன். நான் ஓவியக் கலையில் ஓரளவு பயிற்சி பெற்றவன் என்பது உனக்கும் மற்றவர்களுக கும் தெரியும்.

அதனால் நீ கொடுத்த ஓவியம் போலவே நான் மற்றொரு ஓவியம் தீட்டுகிறேன். இதற்கு ஒருவார காலம் பிடிக்கும். இரண்டு ஓவியங்களில் எது முதலாவது வரையப்பட்டது என்று கண்டுபிடித்து உன் ஓவியத்தை எடுத்துச் செல். இந்தப் பரீட்சைக்கு நம் மன்னரே நடுவர்!" என்றான். சக்தி அதற்குச் சம்மதித்தான்.

சீலன் ஒரு வார காலத்தில் சக்தி கொடுத்த ஓவியம் போல மற்றொரு ஓவியத்தை வரைந்து விட்டான். இரு [illegible] களையும் அவன் [illegible] நாளன்று மன்னன் முன் கொண்டு போய் வைத்தான். அதேநாளில் அங்கு வந்தான் சக்தி.

அந்த இரு ஓவியங்களையும் பார்த்துவிட்டுதான் சீலனுக்கு விற்ற ஓவியம் எது என்பதைக் கண்டு பிடித்துக் காட்டினான். "சக்தி! நீ வென்றுவிட்டாய். அதுதான் நீ எனக்கு விற்ற ஓவியம். அதனை நீ எடுத்துக் கொண்டு போகலாம் [illegible] ஓவியங்களையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, இரண்டு ஓவியங்களும் ஒன்று போல தானே உள்ளன. எப்படி ஓவியத்தைக் கண்டுபிடித்தாய்?" என்று கேட்டான்.

அரசே! சீலன் மிகச் சிறந்த ஓவியர் என்பதில் சந்தேகமே இல்லை. அவர் எவ்வளவு கூர்ந்து கவனித்து ஓவியம் தீட்டி இருக்கிறார் என்பதற்கு இந்த ஓவியத்தில் என் தாயின் இடது காதின் ஓரமாக உள்ள சிறு மச்சத்தைக் கூட ஓவியத்தில் தீட்டி இருப்பதை எடுத்துக் காட்டலாம்.

நான் விற்ற படத்தில் என் தாயாரின் மூக்குத்திக் கல் நீல நிறத்தில் உள்ளது. ஆனால் சீலன் தீட்டிய ஓவியத்தில் அது சிவப்பு நிறத்தில் உள்ளது. இந்த சிறு வித்தியாசத்தைக் கொண்டு என் ஓவியம் எது என்று கண்டு கொண்டேன். ஆனால், இந்தச் சிறிய தவறை கைதேர்ந்த ஓவியரான சீலன் எப்படிச் செய்தார் என்றுதான் எனக்குப் புரியவில்லை என்று கூறி அவர்களை வணங்கிவிட்டுத் தன் ஓவியத்தை எடுத்துக் கொண்டு சென்றான்.

சீலா நீ ஏன் தவறு செய்தாய் என்பது சக்திக்கு புரியாமல் இருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும். தாய் மீது அன்பு கொண்டு சக்தி படத்தை கேட்டதும் உனக்கு அவன் மீது இரக்கம் வந்துவிட்டது. அதே சமயம் உடனே கொடுத்துவிட்டால், என்னுடைய கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்பதால் போட்டி வைப்பது போல் வைத்து, அதற்கு என்னையே நீதிபதியாக்கி வேண்டுமென்றே தவறு செய்வதுபோல் செய்து சக்தியிடம் படத்தை கொடுத்து விட்டாய். உன்னுடைய திறமையை பாராட்டுகிறேன்! என்றான். பிரச்சினை தீர்ந்ததை எண்ணி நிம்மதி பெருமூச்சுவிட்டான் சீலன். (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அவர்கள் குற்றவாளிகள் எனில் நாம் நேர்மையானவர்களா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற விடயம் பேசுபடுபொருளாகியுள்ளது.

தமிழர் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று ஒரு தரப்பும் இல்லை பொது வேட்பாளரை நியமிப்பது புத்திசாலித்தனமல்ல என்று இன்னொரு தரப்பும் தத்தம் கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றன.

இங்கு சொல்லப்படுகின்ற கருத்தை நோக்க வேண்டுமேயன்றி, அந்தக் கருத்தை யார் சொல்கிறார் என்று நோக்குவது பொருத்துடையதன்று.

அந்த வகையில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளரை நியமிப்பதனால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள்.

பொது வேட்பாளரை நியமிக்காமல், சிங்கள இனம் சார்ந்த வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதனால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் பற்றி ஆராய்வதுதான் இங்கு அவசியமாகிறது.

தவிர, இத்தகைய திறனாய்வுகள் என்பது ஒரு குறுகிய வட்டத்துக்குள் செய்து முடிப்பதன்று.

மாறாக, குறித்த விடயம் தமிழ் மக்கள் மத்தியில் பரந்தளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களில் சிங்களவர்களை ஆதரித்து நாம் கண்டது என்ன? என்ற கேள்வி எழுமாயின், தமிழர்களின் உரிமை விடயத்தில் தமிழ் அரசியல் தலைமை நேர்மையுடன் செயலாற்றியதா? என்ற கேள்வியையும் கேட்கத் தவறாதீர்கள்.

ஏனெனில் யுத்தம் முடிவுற்ற கையோடு, மூன்று இலட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைபட்டிருந்தபோது, பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்த நிலையில், படையினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருந்த வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் மகிந்த ராஜபக்ஷ தரப்புடன் நட்புறவு கொண்டிருந்தாரேயன்றி, தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்தின் ஒத்துழைப்போடு இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டுமென அவர் இம்மியும் நினைக்கவில்லை.

அவர்தான் நினைக்கவில்லை என்றால், அவரோடு ஒன்றாக இருந்தவர்களும் அவருக்கு ஆலோசனை கூறவோ, அன்றி அவரின் செயற்பாட்டை எதிர்த்துக் கருத்துக் கூறவே முன்வரவில்லை.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரை எதிர்த்தால், அடுத்த தேர்தலில் தமக்கு வேட்பாளராகும் சந்தர்ப்பம் மறுக்கப்படும் என்ற ஒரே காரணத்துக்காகவே அத்தனை பேரும் மௌனம் சாதித்தனர்.

ஆனால் ஈற்றில் சம்பந்தர் கூட்டமைப்பைக் கலைத்து காவடியாடியபோதுதான் பலருக்கு ஞானம் ஏற்பட்டது.

ஆக, தமிழர்களின் உரிமை விடயத்தில் சிங்கள ஆட்சியாளர்களைக் குறைகூறுவதற்கு முன்னதாக, தமிழ் அரசியல் தலைமை தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்தனத்தையும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அப்போதுதான் தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவையா? இல்லையா? என்ற கேள்விக்கு விடை காண முடியும்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினரால் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

## 2611 ஆவது நாளாகப் போராட்டம் தெடர்கிறது

(வவுனியா)

சித்திரைப் புதுவருடத் தினமான நேற்று வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டம் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சங்கப் பிரதிநிதிகள்,

காணாமல் ஆக்கப்பட்டஎமது பிள்ளைகளைக் கண்டறியவும், எதிர்காலத்தில் இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறுவதற்காக 2ஆயிரத்து 611 வது நாளாக நாம் போராடி வருகின்றோம்.

அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்களின் குழு ஒன்று அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இது எமக்கு மகிழ்ச்சியான விடயம். இவர்கள் சேர்ந்து, தமிழர்கள் மீதான அமெரிக்கக் கொள்கையில் ஒரு மாற்றத்தை வலியுறுத்தி, கடிதம் எழுதியுள்ளனர்.

இலங்கையில் நடந்ததும் நடப்பதும் இனப்படுகொலை என்பதை அவர்கள் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தனர். அத்துடன் தமிழர்கள் அரசியல் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கும் உரிமை உள்ளது. அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு தகுதியானவர்கள். இதன் மூலம் தமிழர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வகையில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தனர்.

அமெரிக்காவில் உள்ள நமது தமிழர்களின் ஆதரவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் மற்றும் 10 அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே தமிழ் அரசியல்வாதிகள் மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்றவாறு தம்மை மாற்றியமைக்க வேண்டும். அவர்கள் அரசியலில் இருந்து பின்வாங்கி, புதிதாக நிறுவப்பட்ட இறையாண்மை நாடுகளான மொண்டினீக்ரோ, தெற்கு சூடான், கொசோவோ, கிழக்கு திமோர் போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி, தமிழ் இறையாண்மையை மீட்டெடுக்க புதிய தலைமுறையை அனுமதிக்க வேண்டும் என்றனர். (ந-7,10)

## இளம் ஆசிரியை மரணம் உடற்கூறு கொழும்புக்கு

யாழ்ப்பாணத்தில் இளம் ஆசிரியை ஒருவர் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். வண்ணார் பண்ணை, வடமேற்கு, ஆனைக்கோட்டை பகுதியை சேர்ந்த கோவிந்தசாமி கல்பனா (37 வயது) என்ற, அராலி முருகமூர்த்தி பாடசாலையின் ஆங்கில ஆசிரியையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இவருக்கு கடந்த சில நாட்களாக உடல் சுகயீனம் ஏற்பட்டது. இந்நிலையில் அவருக்கு பில்லி சூனியம் ஏற்பட்டதாக தெரிவித்து தந்தையும் குறித்த ஆசிரியையும் இளவாலையிலுள்ள கிறிஸ்துவின் சபையில் கடந்த 05.04.2024 அன்று தொடக்கம் தங்கி நின்று பில்லி சூனியம் பார்த்து வந்தனர்.

இந்நிலையில் இவருக்கு கடந்த 13ம் திகதி வயிற்றுவலியும் வாந்தியும் ஏற்பட்டது. இந்நிலையில் அவர் போதகர் மூலம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதோடு மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ந-7,10)

## கடன் மறுசீரமைப்பு தொடர்பில் வோஷிங்டனில் விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பில் வோஷிங்டனில் விசேட கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் இன்று உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மத்திய ஆண்டு மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

அதன்போது, நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான பயனுள்ள கலந்துரையாடலில் பங்கேற்கத் தயாராக உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார். (5-6)

## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(புத்தளம்)

புத்தளம் - மஹகும்புக்கடவல, ஹோம்ப கஸ்வெவ பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

மஹகும்புக்கடவல, ஹோம்ப கஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய லேன்ந்து வாகே விமல் சோமஸ்ரீ எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் தனது வீட்டின் நிலத்தில் [illegible]டிருந்த போது மின்னல் தாக்குதலுக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அங்கிருந்தவர்கள் உடனடியாக மஹகும்புக்கடவல கிராமிய வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (5-6)

## சுகாதார அமைச்சின் 679 வாகனங்கள் மாயம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வெவ்வேறு வாகனங்கள் போதிய தகவல்கள் இன்றி காணாமல் போயுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட தணிக்கையில் 679 வாகனங்கள் இடம் பெயர்ந்தமை தெரியவந்துள்ளது.

240 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கணக்காய்வுக்கு அறிவித்துள்ள போதிலும், இதனை உறுதிப்படுத்தும் வகையில் போதிய தகவல்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. (5-6)

## வினைத்திறனான அம்புலன்ஸ் சேவைகள் 24 மணி நேரமும் தயார் நிலையில்

### ரமேஸ் பத்திரண

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் வினைத்திறன் மற்றும் தொடர்ச்சியான சுகாதார சேவைகளை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவினால் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார செயலாளர் பாலித மஹீபால தெரிவித்துள்ளார்.

பொதுவாக பண்டிகைக் காலங்களில் விபத்துக்கள், உணவு விஷமான சம்பவங்கள் மற்றும் தொற்றாத நோய்கள் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு துரித சேவைகளை வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் மஹீபால தெரிவித்தார்.

அவசர காலங்களில் சேவைகளை வழங்க அம்புலன்ஸ் சேவைகள் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருப்பதாக அவர் கூறினார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

09

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

நிலமுடையவர்கள் அரசனுக்குப் புரிந்த சேவைகள் தாம் இராசக்காரிய முறையின் மிகவும் முக்கியமான சிறப்பம்சமாகும். ஏனெனில், நாட்டின் நிர்வாக, நீதி பரிபாலன ஒழுங்குகள் யாவும். இச்சேவையின் அடித்தளத்திலிருந்தே கட்டி எழுப்பப்பட்டிருந்தன. இதன் முக்கியத்துவத்தை நொக்ஸ், மிகவும் திறம்படப் பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

"நாடு முழுவதும் அரசனுக்கே சொந்தமானது. அவன் தனக்குச் சொந்தமான நிலங்களை, பணத்துக்கன்று, சேவையின் பொருட்டே பகிர்ந்து கொடுத்தான். நிலங்களை மானியமாகப் பெற்ற மக்கள், குத்தகைக்குப் பதிலாகப் பல சேவைகளைப் புரிந்தனர். சிலர் போர்களில் சேவை செய்வர். இன்னும் சிலர் தத்தம் தொழில்களில் சேவை செய்வர். வேறு சிலர் கூலியாள்களாகவும், மற்றவர்கள் அரண்மனைக்குத் தேவையான நிலத்தில் கனிகளை உற்பத்தி செய்யும் கமக்காரராகவும், சேவை செய்வர்.

இவ்விதமாக எல்லாக் கருமங்களும் செலவின்றிச் செய்யப்பட்டதுடன், ஒவ்வொருவனும் தன் முயற்சிக்குத் தக்க சன்மானமாக நிலங்களைப் பெற்றான். ஆனால், தமது சேவைக் கடமை பாரமானதென்று அல்லது தமக்கு மிகுந்தவையெனக் கண்டால் அவர்கள் வீட்டையும் நிலத்தையும் விட்டு, அரசனின் சேவையிலிருந்து விடுதலைபெறலாம்.

கண்டி அரசர்கள் காலத்தில், தானிய வரியே அரச வருவாயின் பிரதான மூலமாக அமைந்தது. ஏனெனில், நெல் விதைக்கப்பட்ட வயல் நிலங்கள் யாவும் இவ்வரியை இறுத்தன. தானியத்துக்குப் பதிலாக பணத்தை இறுக்க மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டது.

### கண்டி இராச்சியத்தில் சாதிமுறை

கண்டி இராச்சியத்தில் தொழில் வேறுபாடுகளின் அடிப்படையிலேயே சாதிப் பாகுபாடுகள் எழுந்தன. இச்சாதிப் பாகுபாடுகளைக் கொண்டு அரச இலாக்காக்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

ஒவ்வொரு மாகாணத்திலும், குறிப்பிட்ட ஒரு சாதியினர் யாவரும் சாதிக்கேற்ற தொழில் இலாக்காவைச் சேர்ந்தவர்கள். இவ்விலாக்காக்கள் "பத்த" எனப்பட்டன. அவ்விலாக்காக்களினின்று வேண்டப்பட்ட சேவைக்குக் கைம்மாறாக மக்கள் நிலங்களைப் பெற்றனர். பல சந்தர்ப்பங்களில் அரசனுக்கு, நாட்டின் பல பாகங்களில் சிதறிக் கிடந்த விசேட கைவினைஞரின்-தொழிலாளரின் அல்லது வேலையாள்களின் சேவைகள் தேவைப்பட்டன.

இச்சேவைகளைத் தலைநகரில் பெறும் நோக்கமாக, அரசன் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு இலாக்காவுக்கு தலைவன் ஒருவனை (லேக்கம்) நியமித்தான். உதாரணமாகக் குயவர் என்ற சாதியினர் 4 கோறளை, 7 கோறளை, ஊவா, மாத்தளை எனும் மாகாணங்களினின்று, இராசக்காரியம் புரிவதற்கென கண்டிக்குச் சென்றனர்.

ஒவ்வொரு மாகாண இலாக்காத் தலைவனும், தனது மாகாணத்தினின்று குயவரை வருடத்தில் 3 மாதங்களுக்கு அரசனின் சேவைக்காகத் தலைநகரத்துக்கு அனுப்பி வைத்தான். இவ்விதமாக, அரசன், எப்போதும் குயவர்களின் சேவைகளைப் பெற்றான்.

தலைநகரில் சேவை செய்யாத குயவர்களுள் சிலர், திசாவையின் வீட்டில் சேவை செய்தனர். எஞ்சியோர் சேவைக்குப் பதிலாக பணத்தை இறுத்தனர். ஒவ்வொரு சாதியும் ஒவ்வோர் இலாக்காவாக அமைக்கப்பட்ட இச்சாதிப் பாகுபாட்டு முறை, அரசாங்க நிர்வாகத்தை நடத்துவதற்கு மிகவும் வசதியாகப் பயன்படுத்தப்பட்டது. கண்டி இராச்சியத்தின் பிரதான இலாக்காக்கள் பின்வருமாறு.

1. கொட்டல் பத்த (கைவினைஞர் இலாக்கா) இதில் கொல்லர், தட்டார், வெண்கல ஆசாரிகள், சிற்பிகள் தச்சர், என்பவர்கள் வேலை செய்தனர்.

2. மதிகே (போக்குவரத்து இலாக்கா) இதில் குருகுலத்தினரும் முஸ்லிம்களும் அடங்குவர். இவர்கள் மாட்டு வண்டிகள் கொண்டு வியாபாரப் பொருள்களை கரைப் பட்டினங்களினின்று கண்டிக்கு ஏற்றினர். போர்க் காலங்களில் விசேட சேவைகள் செய்தனர்.

3. பத்தல் பத்த -(குயவர்) இலாக்கா.

4. றதா பத்த (சலவைத்தொழில் இலாக்கா)

5. குறுவே-(யானை இலாக்கா) பண்ணயா எனும் சாதியைச் சேர்ந்தவர்கள் யானைகளைக் கைப்பற்றிப் பழக்கியதுடன் அரசனின் யானைகளையும் பராமரித்தனர்.

6. ஹுணு பத்த -(சுண்ணாம்பு இலாக்கா) இவர்கள் சுண்ணாம்பைத் தாயாரித்து, அரசாங்கக் கட்டடங்கள் யாவற்றுக்கும் வெள்ளையடித்தனர்.

7. மஹா பத்த -(நெசவாளர் இலாக்கா).

8. கின்னற பத்த -(பாயிழைப் போர் இலாக்கா)

இந்தச் சாதிக் கட்டுப்பாட்டு முறை, அரசாங்கத்தினால் சட்ட ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையாகும். ஒவ்வொரு சாதியினருக்கும் பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள், கலாசார முறைகள், திருமண ஒழுங்குகள் இருந்தன. அவற்றை மீறுபவர்கள் நாட்டின் சட்டத்தை மீறியவர்கள் போன்று தண்டனைக்குட்படுத்தப்பட்டனர்.

### இலங்கையில் பிரித்தானிய இரட்டை ஆட்சிக்காலம்

இலங்கையில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக நிறுவனமும், பிரித்தானிய முடியால் நியமிக்கப்பட்ட மகாதேசாதிபதியும் இணைந்து இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகம் இரட்டை ஆட்சி எனப்படுகின்றது.

பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் நிறுவனத்திற்கெதிரான 1797 ஆம் ஆண்டுக் கலகமே இலங்கையில் இரட்டையாட்சியொன்று ஏற்பட அடிப்படையாக அமைந்தது.

1798 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் சிவில், இராணுவ நிர்வாகம், நீதிப்பரிபாலனம் போன்றவற்றைப் புரிய, ஒரு தேசாதிபதி பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்டார். (இலங்கையில் நியமிக்கப்பட்ட முதல் தேசாதிபதிஸார் பிரடரிக் நோத் என்பராவார்).

அதே நேரம் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் வர்த்தகமும்,* இறைவரி நிர்வாகம் தொடர்ந்தும் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் நிறுவனத்தையே சார்ந்திருந்தது.

### இலங்கையின் கரையோரப் பிரதேச இரட்டை ஆட்சிக் காலத்தில் பிரடரிக் நோத்தின் ஆட்சி நிர்வாகம்

ஆங்கில மன்னன் மூன்றாம் ஜோர்ஜ், 1798 இல் பிரடெரிக் நோத் என்பவரை இலங்கையின் ஆள்பதியாக நியமனம் செய்தார். பிரித்தானிய மன்னரால் நியமிக்கப்பட்ட ஆள்பதி, இந்திய ஆள்பதி நாயகத்தினதும் வர்த்தக சங்கத்தினதும் கட்டளைகளுக்கு அமைந்தே நடக்க வேண்டுமென விதிக்கப்பட்டது.

இலங்கையில் சேவை செய்த பிரித்தானிய அரசாங்கத்தினதும் வர்த்தக சங்கத்தினதும் அலுவலாளர்கள் எக்கருமத்திலும் ஒருவரோடொருவர் முரண்பட்டு நின்றனரேயொழிய ஒத்துழைக்கும் நோக்கமுடையவரல்லர். விசேடமாக வர்த்தக சங்கத்தின் பழைய அலுவலாளர்கள் ஆள்பதிக்குப் பகைமை காட்டியதுமன்றி அவரது முயற்சிகளைத் தடைப்படுத்துவதிலும் வீண் விரயம் செய்வதிலும் ஈடுபட்டு நின்றனர். இப் புதுப்பரிசோதனை ஆரம்பந்தொட்டே சித்தியடைவதற்கான அனுகூலங்களைப் பெற்றிருக்கவில்லை.

நோத் இலங்கையில் இராச்சிய பாரத்தை ஏற்ற பொழுது நாட்டின் பரிபாலனத்துக்குப் பொறுப்பாயிருந்தவர்கள், சென்னை அரசாங்கத்தினால் நியமிக்கப்பெற்ற குடியியற் சேவையாளர்கள். அவர்களைக் கட்டுப்படுத்தி, நாட்டின் நன்மைக்காக உழைக்கச் செய்வதில்நோத் மிகவும் இடர்ப்பட்டார். சென்னை அதிகாரிகள், தமது ஊழல், இலஞ்ச முறைகளைக் கை நெகிழ விட விரும்பாது, நோத்தின் சீர்திருத்தங்களை எதிர்க்கத் திட்டமிட்டனர். அவர்கள், புது நிர்வாக ஏற்பாடுகளை அமுல் செய்வதில் அசட்டை காட்டியது மன்றிப் பல இடையூறுகளையும் விளைவித்தனர். அவர்களுடைய நடத்தையில் அதிருப்தி கொண்ட நோத் பலரை வேலையினின்றும் நீக்கினர்.

நிதி நிர்வாகத் துறையில் வளர்ந்து வந்த களவுகளையும் ஊழல்களையும் நிவர்த்தி செய்யும் நோக்குடன், இலங்கைக்குப் பிரத்தியேகமான குடியியற் சேவையொன்று உடனடியாக நிறுவப்பட வேண்டுமெனப் பிரித்தானிய மேலதிகாரிகளுக்குத் தகவுரை கூறினர்.

அவர் செய்த சிபார்சை அரசாட்சியினர் உடனடியாகச் செயற்படுத்தாமற் போகவே, அவர் பிரதம செயலாளனுக்குப் பொறுப்பு வாய்ந்த நிலவரி சேகரிக்கும் கலெக்டர்கள் ஐவரை கொழும்பு, மட்டக்களப்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நியமித்தார்.

1801 இல் அரசிறை இலாக்காக்களை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசிறை வர்த்தக சபையொன்றினை அமைத்தார். பழைய கலெக்டர்களின் நிர்வாகப் பிரிவுகள், மேற்பார்வை செய்தற்கு அதி விசாலமானவை எனக் கண்ட அவர், கரையோர மாநிலங்களை 13 பிரிவுகளாகப் பகுத்து ஒவ்வொன்றுக்கும் பொறுப்பாகப் பழைய கலெக்டர்களுக்குப் பதிலாக அரசிறை அதிகாரிகளை நியமித்தார். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின்...

புதுவருட நிகழ்வின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்கள் பலருக்கு ஆதரவு வழங்கியிருந்தோம்.

ஆனால் அவர்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவில்லை. ஆதரவளித்த பல பேர் தோல்வியடைந்தனர்.

வெற்றி பெற்ற மைத்திரி உள்ளிட்டோர் தமிழ் மக்களின் அரசியல் தீர்வை பெற்றுத்தரவில்லை. இதனால்தான் நீண்ட நெடும் அனுபவத்தின் அடிப்படையில் பெரும்பாலானவர்கள் மத்தியில் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான கருத்து நிலவி வருகிறது.

தமிழ் வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழர்களுக்கு நீதி வேண்டும். சர்வதேச விசாரணை வேண்டும். தமிழர்களுக்கு இறையாண்மை வேண்டும் என்பதை சர்வதேசத்துக்கு ஒருமித்த குரலில் சொல்ல முடியும்.

மேலும் இந்தியாவின் ஆளுகைக்குள் கச்சதீவு இருந்தாலும் ஒப்பந்தத்தில் கச்சதீவு இலங்கைக்குரியது.

வடக்கு தமிழ் கடற்றொழிலாளர்கள் கச்சதீவில் தொழிலில் ஈடுபடுகின்றனர். தமிழ்நாட்டில் இருக்கின்ற சகோதரர்கள் ஈழத்தின் தொப்புள்கொடி உறவுகள். அவர்கள் எம்மைப் பாதிக்க விடமாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7,10)

## 3ஆம் உலகப்...

இஸ்ரேல் மீது ஈரான் நேற்று 200 இற்கும் மேற்பட்ட ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது.

குறிப்பிட்ட இலக்குகளைக் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

இதன்படி, மிகவும் சக்திவாய்ந்த தாக்குதலாக இத்தாக்குதல் கருதப்படுகிறது.

சிரியாவில் உள்ள ஈரானியத் தூதரகம் மீது இஸ்ரேல் கடந்த முதலாம் திகதி மேற்கொண்ட தாக்குதலில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

காசா போர் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பரவுவதை தடுக்கும் இராஜதந்திர முயற்சிகளுக்கு மத்தியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதன்படி, அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் இஸ்ரேல் மீது வலுவான தாக்குதல் நடத்தப்படலாம் என அமெரிக்கப் புலனாய்வு அமைப்புக்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அத்துடன், இஸ்ரேலின் பாதுகாப்பில் உறுதியாக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்தப் பின்னணியில், ஈரான் இஸ்ரேல் மீது தாக்குதலை நடத்தியுள்ளது.

ஈரானின் தாக்குதலுக்கு கணிசமான பதிலடி கொடுக்கப்படும் என இஸ்ரேல் அதிகாரிகள் அறிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஈரானிய படைகள் தமது வான் எல்லைக்குள் பிரவேசிப்பதனை இஸ்ரேல் தடுத்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் காரணமாக உலகப்போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை அவசரமாக கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் ஈரானால் தாக்கப்பட்ட நிலையில், இஸ்ரேலின் அண்டை நாடான ஜோர்டான் அவசரகால நிலையை அறிவித்து வான்வெளியை மூட முடிவு செய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதால், இஸ்ரேலின் நண்பரான அமெரிக்கா, 'ஒதுங்கி நிற்க வேண்டும்' என, ஈரான் அமெரிக்காவுக்கும் மிரட்டல் விடுத்திருந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதியும் தொலைபேசியூடாக பேச்சு நடத்தியுள்ளார்.

ஆர்ஜென்ரீனாவின் ஜனாதிபதியும் இஸ்ரேலுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

ஈரானின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கப் போர்க்கப்பல்களை வளைகுடாப் பகுதிக்கு அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனவே இது உலக நாடுகள் இரண்டாகப் பிளவுபட உடனடிக் காரணமாக அமையலாம் எனவும் ஏற்கெனவே ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தில் பல நாடுகள் இணைந்துள்ளதாலும் எனவே எவ்வேளையிலும் மூன்றாம் உலகப் போர் வெடிக்கலாம் எனவும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்கள் மிகவும் அவதானமாகவும் எச்சரிக்கையுடனும் செயற்படுமாறு இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதுவர் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்படி, இலங்கையர்கள் தங்கள் பணியிடங்களை விட்டு வெளியேற வேண்டாம் என்று பேஸ்புக் பதிவொன்றின் மூலம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் போதிய உணவு பொருட்களை வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந-7,10)

## தமிழ்ப் பொது...

தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக கடந்த 12ஆம் திகதி நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் அரசியல் கட்சிகள் எதுவும் கலந்துகொள்ளாமை கட்சிகளிடையேயான பிளவை உறுதிப்படுத்தியுள்ளது.

இது இவ்வாறிருக்க மலையகத் தமிழ் அரசியல்வாதிகளும் பொது வேட்பாளர் முறைமை தவறு எனவும் இதனால் தமிழருக்குத் தீர்வு கிட்டாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை தமிழர் சார்பில் பொது வேட்பாளர் என்பது கண்துடைப்பு வித்தை எனவும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல் எனவும் சில கட்சிகள் விமர்சித்துள்ளன.

நிலைமை இவ்வாறாக இருக்க, தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசியல், பொருளாதார சூழலில் தமிழ் மக்கள் தமது இருப்பை நிலைநிறுத்தவும் உரிமைக் கோரிக்கைக்கான ஒரு குரலாகவும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை முன்வைப்பது பொருத்தமாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்படுவதனூடாக, தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையிழந்து விட்டார்கள் என்பதையும் தமிழ் மக்களின் உரிமைக்காக ஒன்றுபட்டமையை, பொது வேட்பாளருக்கு திரளாக வாக்களிப்பதன் மூலம் உணர்த்த முடியும் எனவும் அவர் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை எதிர்ப்பவர்கள் பேரினவாத ஆட்சியாளர்கள் வெல்வதற்கே துணை செய்கிறார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை தமிழ்ப் பொது வேட்பாளரினால் தமிழர்களுக்கு எதுவித தீர்வு கிட்டாது. வீணாக தமிழர்களின் வாக்குகளினை சிதறடிக்க வேண்டாம்.

தமிழ் அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள் தமிழ் வாக்காளர்களைத் தவறாக வழிநடத்தி தென்னிலங்கை அரசியல்வாதிகளின் பகையினை சம்பாதிக்கக்கூடாது என்றும் ஆளும் எதிர்க்கட்சிகள் அறிவுறுத்தியுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தபோதும் பெரும்பான்மையினரின் வாக்குகளால் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றியீட்டியிருந்தார்.

தனது முதலாவது சிம்மாசன உரையின்போது அவர் இதனைச் சுட்டிக் காட்டித்தான் பெரும்பான்மையின மக்களின் ஆட்சியாளர் என உரையாற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

### அதிகரிக்கும் பண்டிகைக் கால

# வீதி விபத்துக்களினை தடுக்க துரித கதியில் பொலிஸார்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் பல பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 14 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துக்கள் தொடர்பில் கருத்துரைத்த பொலிஸ் ஊடக பேச்சாளர் நிகால் தல்துவ,

கவனயீனமாக வாகனம் செலுத்துதல் மற்றும் குடிபோதையில் வாகனம் செலுத்துதல் போன்றவற்றினால் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

இதேவேளை, வேகமாக வாகனம் செலுத்துதல், கவனயீனமாக வாகனம் செலுத்துதல் மற்றும் மோட்டார் போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் செலுத்துவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்வதற்கு விசேட பிரிவுகள் நாடு முழுவதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நேற்றையதினம் முதல் மோட்டார் சைக்கிள்களில் பொலிஸார் தீவிர ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றார். (ந-7,10)

## அமெரிக்க...

வாழ்த்தினை வெளியிட்டுள்ளார்.

இந்தச் சிறப்பான நிகழ்வைக் கொண்டாடும் உலகில் உள்ள அனைவருக்கும் தானும் தன் மனைவியும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர் தனது குறிப்பில் கூறியுள்ளார். (ந-7,10)

## தேர்தல்...

தெடுக்கலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுச் சின்னம் குறித்து ஜனாதிபதி தீவிரமாகப் பரிசீலித்து வரும் நிலையில் அந்தப் பட்டியலில் கையடக்கத் தொலைபேசி சின்னம் முன்னிலையில் இருப்பதாக அறியமுடிகின்றது.

அத்துடன், நிலையான தொலைபேசி என்பது அந்தக் காலம், ஸ்மார்ட் போன் என்பதே இந்தக் காலம் எனக் கூறி, சஜித் அணிக்கு எதிராகப் பிரசாரம் செய்யவும் இதனைப் பயன்படுத்த முடியும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சின்னம் தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. (ந-7,10)

## சூடு பிடிக்கிறது...

ஈடுபடும் உரிமையைத் திரும்பக் கோரப்படும் என்ற எதிர்வையும் அவரின் அறிக்கை உருவாக்கியுள்ளதாகவும் சீனப் பத்திரிகை கோடிட்டு காட்டியுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் கடல் எல்லையில் அமைந்துள்ள கச்சதீவு உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்ய வேண்டாம் என கொழும்பில் உயர் ஸ்தானிகர்களாகப் பணியாற்றிய முன்னாள் இந்திய இராஜதந்திரிகளான சிவசங்கர் மேனன் மற்றும் நிருபமா ராவ் ஆகியோர் கூறியுள்ளதாக சீன செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பெரிய இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதாக இலங்கைக் கடற்றொழிலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனினும், இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்படுவதற்கும் கச்சதீவுக்கும் நேரடித் தொடர்பு இல்லை என்று இந்தியா மறுதலித்துள்ளது. (ந-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேச செயலக விவகாரம் புத்தாண்டான நேற்றைய தினம் கறுப்புச் சித்திரைப் போராட்டம்




கல்முனைவடக்கு பிரதேச செயலக நிர்வாக ரீதியான பிரச்சினைகளை வென்றெடுப்பதற்காக 21 ஆவது நாளாகவும்போராட்டம் கறுப்பு சித்திரை என்ற பெயருடன் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பிரதேசசெயலகம் மீது திணிக்கப்படும் நிர்வாக அடக்கு முறைகளையும் அத்துமீறல்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என சித்திரைப் புத்தாண்டை கறுப்பு சித்திரையாக பிரகடனப் படுத்துவதாகவும் எனவே பிரதேச செயலகத்திற்கான நிர்வாக உரிமையை வென்றெடுக்க அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் பிரதேச செயலகத்தின்முன்பாக கறுப்புப் பொங்கல் பானையில் பொங்கப்பட்டது.

இதன் போது மோட்டார் சைக்கிள் பவனி ஒன்று இளைஞர்கழகங்கள்,விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் கறுப்பு கொடி ஏந்தப்பட்டு பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது.

இந்நிலையில்அங்குவருகை தந்த கல்முனை தலைமையக பொலிஸார் நீதிமன்றகட்டளைப்படி பொதுமக்களின் போக்குவரத்து மற்றும் பொதுச் சொத்துக்கள் சேதமாக்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக போராட்டக்காரர்கள் என மூவரின் பெயரை குறிப்பிட்டு அவர்களிடம் கடிதம் வழங்கியமையால் அங்கு சிறு பதற்றம்எற்பட்டது. (ந-7)

## போலிக்கடவுச் சீட்டு மூலம் இலங்கை வர முயன்ற தம்பதியர் கைது

(சென்னை)

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்கு வர முயன்ற தம்பதியினர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பு வரவிருந்த விமானத்தில் ஏறவிருந்த பயணிகளின்பயண ஆவணங்களைக் குடி வரவு அதிகாரிகள் சோதனை செய்த போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில், இருவரும் இலங்கையை சேர்ந்தவர்கள் என்பதும், கடந்த சில ஆண்டுகளாக பெரம்பலூரில் தங்கி ரேஷன் அட்டை மற்றும் பிற இந்திய ஆவணங்களை பெற்றிருப்பதையும் அதிகாரிகள் கண்டுபிடித்தனர். (ந-7.10)


ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2024.04.28 ம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.
அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
பிரேரணைகள் ஏதும் இருப்பின் 2024.04.21 திகதிக்கு (மாலை 5.00 மணிக்கு) முன்னர் எழுத்து மூலமாக செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

செயலாளர்
ஆலய பரிபாலன சபை
(453)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0141)
076 825 7716 (ஆகாஸ்)

உங்கள் ஆலய திருவிழாக்களில்...
(18.04.2024 வரை)
ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு தொடர்பு கொள்ளலாம்.
கலைமாமணி DR.S.S. சர்மா(குருஜீ) (435)
075 99 811 77

வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (395)
074 17 37 684

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-0142)
எமது கிளைகள்: •கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
•கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0142)

தேவை
மூன்று மொழிகளிலும் பேச, எழுதவல்ல அனுபவமுள்ள / அனுபவமற்ற
அலுவலக உத்தியோகத்தர்
வலை வடிவமைப்பாளர் (Web Designer)
(454)
074 005 5961

Expo Net
Overseas Consultants
2003 ம் வருடத்தில் இருந்து 1800 Visa அனுமதிகளைப் பெற்றுக் கொடுத்து சாதனை படைத்த நிறுவனம். நாளை பத்திரிகையில் அதற்குரிய படங்களும் பிரசுரிக்கவுள்ளோம். இந்த சந்தர்ப்பத்தை தவறவிடாது உடனடியாக விண்ணப்பிக்கவும்.
எமது நிறுவனத்தின் பதிவுக்கட்டணம் 2003ல் இருந்து 30,000/- ரூபாய் மட்டுமே.
எங்களை நேரடியாகவோ அல்லது கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவும் இது சம்பந்தமான விபரங்களை அறிந்து கொள்ளலாம்.
021 222 5686 / 076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road,Jaffna (292)

பகுதி நேர வேலைவாய்ப்புக்கள்
⇨ 100 இற்கும் மேற்பட்ட பகுதிநேர வேலைவாய்ப்புக்கள்
⇨ 25 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும்.
⇨ O/L தகைமை போதுமானது
பதிவுக் கட்டணம் உண்டு.
பதிவு செய்ய விரும்புவோர் உங்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வாருங்கள்
12 வருட காலமாக வேலை தேடுவோரின் ஒரே ஒரு நம்பிக்கை
WINSTAR JOB BANK மட்டுமே (450)
WINSTAR CONSULTANTS PVT LTD
45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
077 077 6979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.